Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 338 30.03.2001 வெள்ளிக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

நகையா!
22 கரட்டில் தெரிவு செய்ய இன்றே நாடுங்கள்
A.K.S ஜுவலர்ஸ்
பிரதான வீதி, கல்முனைக்குடி

## மாந்தீவு வைத்தியசாலை மூடப்படும்
## போதனா வைத்தியசாலையில் தொழுநோயாளர் பிரிவு

(அரியம்)

மட்டக்களப்பு மாந்தீவு தொழு நோயாளர் வைத்திய சாலை மூடப்பட்ட பின்பு வைத்தியசாலை அமைந்திருந்த பிரதேசம் இராணுவ பாவனைக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஏ.எம்.எஸ். வெலிகஸ்வத்த தெரிவித்துள்ளார்.

மேற்படி வைத்திய சாலை மூடப்படுவது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக சுகாதார அமைச்சர் ஜோன் செனவிர த்னவின் பணிப்புரையின் பிரகாரம் பாராளு மன்றக் கட்டிடத் தொகுதியல் உயர் மட்ட மகாநாடொன்று நடை பெற்றது.

இம் மகாநாட்டில் மட்டக் களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளு மாறு அழைக்கப்பட்ட போதிலும் பிரதி அமைச்சர் எஸ். கணேசமூர்த்தி உட்பட 4 பாராளுமன்ற உறுப்பினர் கள் கலந்து கொள்ளவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் பி.செல் வராஜா மட்டும் கலந்து கொண்டார்.

மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலை மூடப்பட்டு வைத்தி யசாலைப் பிரதேசம் இராணுவப் பானைக்கு பொறுப்பேற்கப்படவி ருப் பதாக ஊகங்கள் நிலவுவதாகவும் எக்காரணம் கொண்டும் இப் பிரதேசம் இராணுவப் பாவணைக்கு பொறுப்பேற்கப்படக் கூடாது என்றும் இப்பிரதேசத்திற்கு உரித்து டையவர்களான ஆயர் இல்லத்திடம் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பி. செல்வராஜா இம் மகாநாட்டில்

(8ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படலாம்!

(நமது சிறப்பு நிருபர்)

**அமெரிக்காவில் விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட பின்பு அந் நாட்டு மக்களிடையே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அதிகரிக்கப்பட்டு வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.**

விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து அமெரிக்க மனித உரிமை அமைப் புக்கள் மற்றும் நிறுவனங்கள் தற் போது விவாதங்களை நடத்தி வருகின்றன இதன் காரணமாவே விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு பெருகி வருவதாக கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத் தாபனம் கூறு கிறது.

### அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிப்பு

அமெரிக்காவின் விடுத லைப் புலிகள் மீதான தடை நீக்கப்படலாம் என்று அமெரிக்க ஆய்வாளர்களில் ஒருவர் கருத்து தெரிவித்ததாக அந்தச் செய்தி கூறுகின்றது.

இதேவேளை அமெரிக் காவின் முன்னணி ஆய்வு நிறுவனம் ஒன்று விடுதலைப் புலிகள் மீதான தடை பிழையான ஒரு ராஜதந்திரம் என்று தெரிவித்துள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர் வரவில் வடக்கு கிழக்கில் மாற்றம்

(நமது நிருபர்)

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு பாடசாலை ரீதியாக தோற்றவிருக்கும் பரீட்சாத்திகளில் பாடசாலை வரவு 80 சதவீதமாக இருக்க வேண்டும் என்ற நிபந்த னையில் வடக்கு கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்படவிரு க்கின்றது.

மட்டக்களப்பு மாவட் டப் பாராளுமன்ற உறுப்பினர் பி.செல் வராஜா இன்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந் ,அமைச்சின் மேலதிகச் செயலாளர் செனவிரத்

(8ம் பக்கம் பார்க்க)

## ஓட்டமாவடியில் நேற்று ஹர்த்தால் இன்று கண்டனப் பேரணி

(நமது நிருபர்)

ஓட்டமாவடிப் பிரதேசத்தில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக் கப்பட்டது. "கல்குடா ருடே" எனும் தலைப்பில் வெளியான பத்திரிகை ஒன்றில் பிரதியமைச்சர் ஒருவரைப் பற்றிய சில பிழையான கருத் துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்த

(8ம் பக்கம் பார்க்க)

## கஸ்ரப் பிரதேச அதிபர்களுக்கு விஷேட சலுகை

(நமது நிருபர்)

விடுவிக்கப்படாத கஸ்ரப் பிரதேசங்களில் கடமை புரியும் நிறைவேற்று அதிபர்கள் நிரந்தர நியமனம் பெறுவதற்கு மூன்று வருடங்கள் சேவைக் காலத்தை பூர்த்தி செய்தால் போதுமென்று கல்விச் சேவை ஆணைக்குழு செயலாளர் ரி.எம். தென்னக்கோன் தெரிவித்தார்.

ஏற்கனவே நிறைவேற்று அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு ஐந்து வருட காலத்தை பூர்த்தி செய்திருக்க

(8ம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு

✔ அலுமினியம் பப்ரிகேட்டர்
✔ அலுமினியம் பிட்டர்
✔ அலுமினியம் இன்ஸ்டொலர்

மற்றும் வீட்டுப்பணிப் பெண்களுக்கு உடனடி வேலை வாய்ப்பு முற்றிலும் இலவசமாக.

நியூபாஹிம் என்டப்பிரைஸஸ்
283/1, மெயின் வீதி,
புறக்கோட்டை
L.L.NO: 736

காத்தான்குடியில் விமான பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

நியூபாஹிம் என்டப்பிரைஸஸ்
இல:151, 1/1, பிரதான வீதி,
காத்தான்குடி -02
065-47090

ADVT.

### இன்று இலவச கொப்பிகள் வழங்கப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் வசதி குறைந்த மாணவர்களுக்கு மாநகர சபையால் இலவச அப்பி யாச கொப்பி வழங்கும் வைபவம் இன்று 30ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் பத்தரை மணிக்கு மட்ட க்களப்பு மகாஜனாக் கல்லூரி மண்டபத்தில நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடகிழக்கு தவிர்ந்த ஓய்வூதியத் திட்டத்தில் புதிய ஏற்பாடு

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் ஓய்வூ தியம் மற்றும் விதவைகள், தபுதா ரன்,கொடுப்பனவுகளை வழங்கு வதை துரிதப்படுத்துவதற்காக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.யுனைதீன் அறிக்கை ஒன்றை அனுப்பி வைத் துள்ளார்.

யூன் முதலாம் திகதி ஓய்வூதியர் நிரந்தரமாக வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலகம் மூலமே மதாந்தம் கொடுப்பனவு வழங்கப்படும்,

இதனால் மே மாதம் 31ம் திகதிக்கு முன்னர் வேறு பிரதேச ங்களில் வசிக்கும் ஓய்வூதியர் களின் கோவைகளை அந்தந்தப் பிரதேசங்க ளுக்கு அனுப்பி வைக்குமாறு அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

விதவைகள் ,தபுதாரன் ஓய்வூதிய கொடுப்பனவை துரிதப் படுத்துவதற்காக ஓய்வூதியர்களு க்கு படிவம் ஒன்றை வழங்கி இவ வருடம் ஆகஸ்ட் மாதத்திற்கு முன னாக பட்டியல் ஒன்றை தயாரிக்கு மாறு அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது.

வங்கிகள் தபாலகங் களில் ஓய்வூதியம் பெறுவோர், ஓய்வூதியத் திகதியில் இருந்து ஒரு மாதத்திற்கு கொடுப்பனவை பெற வேண்டும்.

அவ்வாறு பெறத் தவறும் நிதியை வங்கியிடம் இருந்து மீளப் பெறுவதற்கு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மூன்று மாதங்களுக்குள் பெறப்படாத ஓய்வூதியத்திற்கு பொது நிர்வாக அமைச்சு பொறுப் பேற்க மாட்டாது.

### வன்னி மைந்தன் சாதனை

(வவுனியா நிருபர்)

வன்னியில் 600 தொன் எடையுள்ள வாகனத்தை காதில் கட்டி இழுத்து ஒருவர் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

சிவஞானம் சிறீதரன் என்பவர் தனது காதிலும் தலை முடியிலும் கட்டி 600 தொன் எடையுள்ள வாகனத்தை இழுத்து சாதனை புரிந்துள்ளார்.

திங்கள் மாலை இந்த நிகழ்வு இடம்பெற்றது. ஆயிரக் கணக்கானோர் சென்று பார் வையிட்டனர்.




விடுதலைப் போராட்டத்தைப் பற்றி அடிமைகளுக்குத் தானே விளங்கும் பிரபுகளுக்கு விளங்க ஞாயமில்ல.............

## சந்திவெளியில் குடும்பஸ்தர் வெட்டிக் கொலை

(நமது நிருபர்)

சந்திவெளியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் இனந் தெரியா த நபர்களினால் அழைத்துச் செல்ல ப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சந்திவெளியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அகிலன் என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

புதன்கிழமை வீட்டுக்கு வந்த இனந் தெரியாத நபர்கள் இவரை கூட்டிச் சென்றதாகவும் நேற்று மாலை ஐந்து மணியளவில் வெட்டுக் காயங்களுடன் சடலமாக

(8ம் பக்கம் பார்க்க)

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055


## நீதி தூங்கவில்லை

மன்னாரில் கடந்தவாரம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நாசகாரத் தடுப்புப்பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட இரு பெண்களும் கைது செய்த படையினராலும் விசாரணை செய்த நாசகாரத்தடுப்புப் பிரிவினராலும் மிக மோசமான முறையில் நடத்தப்பட்டிருக்கின்றனர்.

இந்த இரு பெண்களையும் வைத்திய பரிசோதனைக்குட்படுத்துமாறு மன்னார் மாவட்ட நீதிபதி உத்தரவிட்டிருக்கிறார்..

இந்த இரு பெண்களும் படையினராலும் நாசகாரத் தடுப்புப் பிரிவினராலும் நிர்வாணமாக்கப்பட்டு மிக மோசமாகவும் பயங்கரமாகவும் நடத்தப்பட்டிருக்கின்றனர்.

வெளியே சொல்ல முடியாத முறையில் காட்டுமிராண்டித்தனமாக இப் பெண்கள் சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இதுபோன்ற நிலை இனிமேலும் வேறு எந்தப் பெண்ணுக்கும் ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்பதற்காகத் தங்களுக்கு நேர்ந்த அவமானம் நிறைந்த அவலத்தை அவர்கள் வெளியிட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

ஆட்சி பீடத்தில் ஒரு பெண் அமர்ந்திருக்கும் இவ் இலங்கைத் தீவில் இதற்கு முன்னரும் கிருஷாந்தி முதல் கோணேஸ்வரி வரை சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஆனாலும் பெண்களைச் சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தி தங்கள் வெறியைத் தீர்த்துக்கொள்ளும் செயல் இன்னமும் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள ஆயுதப்படைகளைச் சேர்ந்த சிலரிடமிருந்து மறையவில்லை.

ஆயுதப்படைகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் போது முறையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் இதுவே நாட்டின் ஒழுங்கீனங்களும் குற்றச் செயல்களும் அதிகரிப்பதற்கான காரணம் என்றும் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

ஒரு பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த ஒருவர் இக்குற்றத்திலிருந்து நீதிமன்றத்துக்குத் தப்புவதற்காக ஆயுதப்படைகளில் சேர்ந்து வடக்குக் கிழக்கில் சேவை செய்கின்றார் என்பதை அங்கவீனமுற்ற முன்னாள் படையினர் சங்கத்தின் தலைவர் அசோகா தயாரத்தினா இச்சங்கத்தின் கூட்டத்தில் பேசுகையில் உதாராணமாக எடுத்துக் கூறியிருந்தார்.

வடக்குக் கிழக்கில் தேசப் பாதுகாப்புக்காக எப்படிப்பட்டவர்கள் படைக்குத் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படுகின்றார்கள் என்பதை இந்த முன்னாள் படை அதிகாரியை விட வேறு எவரும் சொல்லித்தெரியவேண்டிய அவசியம் இல்லை. வடக்குக் கிழக்கிலுள்ளவர்கள் இலங்கை மக்கள் என்று மட்டுமல்ல, அவர்களை மக்களாகவே கூட கருதவில்லை என்பது தேசப் பாதுகாப்புக்கென வடக்கிலும் கிழக்கிலும் பணிபுரிய அனுப்பி வைக்கப்படும் ஆயுதப் படைகளைச் சேர்ந்த சிலர் நடந்து கொள்ளும் முறையிலிருந்து கணித்துக்கொள்ளலாம்.

இதைவிட ஜனநாயகத்தின் ''காவல் நாய்கள்'' என்று வர்ணிக்கப்படும் பத்திரிகைகள் குறிப்பாக, கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில சிங்களப் பத்திரிகைகள் செயல்படும் முறை மிகக் கேவலமானது. இந்த இரு பெண்கள் மிக மோசமாக சிறிதும் மனிதாபிமானமில்லா முறையில் மோசமாக நடத்தப்பட்டிருப்பதை இதுவரை சிங்கள ஆங்கில தினசரிகள்வெளியிடவேயில்லை.

கிளிநொச்சிப் பகுதியில் மனித எலும்புக்கூடுகள் பல கண்டெடுக்கப்பட்டதையோ, மிருசுவில் குழந்தை உட்பட பலர் வெட்டிப் புதைக்கப்பட்ட செய்தியையோ முக்கியத்துவம் கொடுத்து சிங்கள மக்களும் அறிந்து கொள்ளக்கூடியதாக வெளியிடவேயில்லை. அரசியல்வாதிகள் ஆன்மிகவாதிகள் மட்டுமல்ல, சில பெரிய பத்திரிகைகள் கூட இன வெறியை ஊட்டி தமிழ் இன ஒழிப்புக்கே தூண்டி விடுகின்றன.

நல்ல காலமாக வவுனியாவில் இளஞ்செழியன் எனும் நீதிபதி மன்னாரில் அஜ்மீர் என்ற நீதிபதி இன்னும் இந்த நாட்டில் நீதி தூங்கவில்லை என்பதை உணர்த்தி நம்பிக்கையையே இழந்துவாழும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு ஆறுதலளிக்கின்றனர்.

# மோசடிப் பேர்வழிகளை உருவாக்கிய வவுனியா வதிவிட அனுமதிப்பத்திரம்

**(நேற்றைய தொடர்ச்சி.....)**

இதுஇப்படியிருக்க சமூகசேவைத் திணைக்களத்தால் வயோதிபருக்கென்று அனுமதியட்டை ஒன்று வழங்கப்பட்டது. இதை முன்னர் அறுபத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு வழங்கினார்கள். தற்பொழுது எழுபது வயதிற்கு மேற்பட்டவர்களிற்கே வழங்கப்படும் என வவுனியா பிரதேச செயலகத்தில் அறிவித்தல் கடிதமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்படியானால் எழுபது வயதிற்கு உட்பட்டவர்கள் வயோதிபர் இல்லையா? எழுபத்தைந்து வயதிலும் உசாராகத்திரியும் வயது வந்தவர்கள் உள்ளனர். ஆனால் ஐம்பது, ஐம்பத்தைந்து வயதிலேயே உடல் சோர்ந்து இளைத்துப் போயிருப்பவர்கள் ஏராளம் பேர். இப்படியான விடயங்களை கருத்திலெடுக்காது. வயோதிபர்களிற்காக வழங்கப்படும் அடையாள அட்டையிலும் ஏன்தான் கைவைத்தார்களோ? இந்த வயோதிபர் அடையாள அட்டையினை வைத்திருந்தால் பிரயாணம் செய்வதற்கும் இலகுவாக இருக்கும். இதில் இன்னுமொரு துன்பம் என்னவென்றால் வன்னியிலிருந்து வருபவர்கள் இந்த வயோதிபர் அடையாள அட்டையினை வைத்துக் கொண்டு வவுனியாவை விட்டு வெளியே செல்வதென்றால் அதற்கான பிரயாண அனுமதி பெறவேண்டும். இதனால் ஏற்படும் இடையூறுகளை எடுத்துரைத்தால் அதாவது அனுமதி பெறுவதற்கு வயோதிபர்களைக்கொண்டு வந்து திரிவது கடினமான காரியம் எனக் கூறினால் போதும். பாதுகாப்புத்தரப்பினரிடமிருந்து கேள்வி வருகின்றது இங்கிருந்து கொழும்புக்குப் போகப்போகின்றீர்கள் அனுமதி பெறுவதற்கு கொண்டு வருவதா பெரிய காரியம். இந்தக் கேள்விகளிற்கு பதில் கூறுமளவிற்கு பிரயாணிகள் தயாரில்லை. நிலமை ஆயுதமுனையில் உள்ளதால் மக்கள் பிரயாண அனுமதி பெறுவதில் அக்கறை செலுத்திவிட்டு அமைதியாக இருந்து விடுகின்றனர்.

கடந்த ஒருவருடமாக நிரந்தர அனுமதி வைத்திருப்போரும் வவுனியாவைவிட்டு வெளியே செல்வதானால் ஈரற்பெரியகுளத் தில் உள்ள சோதனைச் சாவடியி லும், புகையிரத நிலையத்திலும் எங்கே போவது, எப்போ திரும்பி வருவது என்பதை பதிவு செய்துவிட்டே பிரயாணத்தைத் தொடர வேண்டும்.

இந்த வதிவிட அனுமதிப்பத்திரம் கொண்டு வந்ததன் நோக்கம் விடுதலைப்புலிகளின் ஊடுருவலைத் தடுக்கவென பாதுகாப்புத் தரப்பினரால் கூறப்பட்டாலும். விடுதலைப் புலிகளின் ஊடுருவலை தடுத்துவிட்டார்கள் எனக் கூறமுடியாது. அரசியலாளர்களின் கருத்துப்படி

## கனகரவி

வன்னித் தேர்தல் தொகுதியில் தமிழ் மக்களின் வாக்குரிமையினைக் கட்டுப்படுத்துவதற்காகத் தான் வதிவிட அனுமதியை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளனர் என கூறப்பட்டுள்ளது. எது எப்படியிருந்த போதும் இந்த அனுமதிப் பத்திர நடைமுறை பல மோசடிப் பேர்வழிகளை உருவாக்கிவிட்டுள்ளது. சட்டத்தில் இல்லாத நடைமுறையில் உள்ள வதிவிட அனுமதி மறுப்பை பல சட்ட விரோதச் செயல்புரியும் பலரை உருவாக்கியுள்ளது. இதனை அச்சொட்டாக எவர் எங்கே எப்போது செய்கின்றார்கள் என விபரங்களை வெளியிடுவதற்கு பணம் கொடுத்து அனுமதி பெறுபவர்கள் முன்வந்து தெரிவித்தாலன்றி கண்டு பிடித்து தண்டனை வழங்க வேறு வழியில்லை. இப்படிப் பணம் கொடுத்து அனுமதிபெறுபவர்களிடம் விபரம் தாருங்கள் எனக் கேட்டால்.. அவர்கள் எம்மிடம் கேட்பது நீங்கள் இப்படி நாங்கள் பிரயாணம் செய்வதையும் தடுக்கப் பார்க்கின்றீர்களோ? என்பதாகும் இதற்கு எவர் பதில் கொடுக்கப் போகின்றார்கள்? ஆக இந்த வதிவிட அனுமதி வழங்கும் முறையால் பல மோசடிப் பேர்வழிகள் உருவாகியுள்ளனர். ஒவ்வொரு விதமான அனுமதிக்கும் ஒவ்வொரு விதமான கணக்கில் பணத்தை கறந்தெடுக்கின்றனர்.

இதைவிட வவுனியாவிற்குள் வருவோரில் கொழும்பிலிருந்து வருவோர் அந்தப்பகுதி பொலிஸ் பதிவை வைத்திருக்க வேண்டும். பொலிஸ் பதிவின் நிழல்பிரதி ஒன்றை உள்நுழையும் போது பொலிசாரிடம் ஒப்படைக்க வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து வருவோர் பிரயாணம் செய்த கப்பல் சிட்டையினை சமர்ப்பிக்க வேண்டும். தவறின் திருப்பி அனுப்பப்படுகின்றனர். வவுனியாவிற்கு மாத்திரமான அனுமதியை வழங்குகின்றனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக புகையிரத நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி, ஈரற்பெரியகுழம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரை வவுனியா மாவட்ட நீதிமன்றத்திற்கு அழைத்த நீதிபதி எம். இளஞ்செழியன் அவர்கள் நீண்ட சட்டவிளக்கம் கொடுத்துள்ளார். வதிவிட அனுமதிப்பத்திரம் வழங்குவது எமது சட்டத்திற்கு அப்பாற்பட்ட விடயம். படையினரின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் பாதுகாப்புக் காரணங்களிற்காக இது மேற்கொள்ளப்படுவதனால் அதற்கு மக்கள் பணிந்து நடக்கின்றனர். அதற்காக பொலிசார் விரும்புகின்ற ஆவணங்களை பயணிகள் கொண்டு

**(5ம் பக்கம் பார்க்க...)**

# மொழியியலும் இலக்கியத் திறனாய்வும்

கலாநிதி
**எம். ஏ. நுஃமான்**

இக்கவிதை பற்றிய ஏ.கே. ராமானுஜனின் (1983) வாசிப்பு சுவையானது. அவருடைய வாசிப் பின்படி இது தலைவியின் முதல் பாலியல் அனுபவம் பற்றிய கவிதை. வீட்டில் கிடைக்கும் தேன் கலந்த பாலைவிட சருகுகள் மண்டிய, விலங்குகள் கலக்கிய நீர்க்கேணி மிகுந்த பரவசம் தருவது பற்றிய அவளது கண்டுபிடிப்பைக் கூறும் கவிதை. தேன், பால், பண்பாடு, ஒழுங்குமுறை அனைத்தையும் விட்டு அவள் விலங்குகள் சேறாக்கிய இயற்கை நீரை அருந்தச் சொல்கிறாள். கவிதை தாயின் மடியை விட்டு அவளது தலை வனது நாடும் இரு நிலைகளை, இருவித மனிதர்களைச் சித்திரிக்கின்றன. தலைவனது நாடு தலைவனையே போன்றது. இன்னும் ஒரு கோணத்தில் தலைவி தானே நீர்க்கேணியாக இருக்கிறாள். தலைவன் மகிழ்ச்சியான விலங்கு. அந்த விலங்கு நீர்க்கேணியைக் கலக்கின் அருந்த அவள் மகிழ்வுறுகிறாள். இவ்வாறு ஒரு சிறிய கவிதை நாம் அதற்குள் செல்லும்போது பல விசயங்களைச் சொல்கிறது.

முதலாவது உதாரணத்தில் மொழிக்கூறுகள் (சொற்களும் வாக்கியமும்) நேர்பொருளை மட்டும் தருகின்றன. இரண்டாவது, மூன்றாவது உதாரணங்களில் அவை நேர்பொருளின் அடிப்படையில் மறைபொருள் அல்லது உள்ளுறை பொருள்களில் ஒரு அடுக்கினை உருவாக்குகின்றன. இவ்வகையிலேயே ஒரு கவிதை அல்லது வேறு ஒரு இலக்கியப் படைப்பு மொழியினால் கட்டமைக்கப்படும் பிறிதொரு மொழியாக அமைகின்றது.

.'.பேடினன் டி சசூர் (1978) மொழியை குறிகளின் ஒரு ஒழுங்கமைப்பாக **(Language as a system of signs)** விளக்குவார். அவ்வகையில் மொழியியலை குறியியலின் **(semiotics)** ஒரு பிரிவாகவே அவர் கருதுகிறார். இவ்வகையில் ஒரு இலக்கியப் படைப்பை குறிகளால் ஆன ஒரு குறி என விளக்கலாம். மொழியினால் கட்டமைக்கப்படும் மொழி என்பதும், குறிகளால் ஆன குறி என்பதும் இலக்கியத்தின் ஓர் அம்சத்தையே விளக்குகின்றன. அதாவது மொழிக் கூறுகளே இலக்கியத்தின் அடிப்படை. அந்த அடிப்படையில் கட்டப்படும் இலக்கியம் தனக்கென்று சுயாதீனமான அமைப்பைக் கொள்கின்றது. இந்த அமைப்பு பல்வேறு பொருள்தள விரிவுக்கு வழிவகுக்கக் கூடியது. ஆயினும், மொழிப் பயன்பாட்டின் பல்வேறு சாத்தியப்பாடுகளே இதற்கும் அடிப்படையாக அமைகின்றன என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

றோமன் ஜகோப்சன் (1985: 66-71) மொழியின் ஆறு வகைச் செயற்பாடுகள் பற்றி விளக்குகிறார். இவற்றுள் முதலாவதும் அடிப்படையானதும் சுட்டுச் செயற்பாடு **(referential function)** ஆகும். இதை மொழியின் நேர் செயற்பாடு என்றும் கூறலாம். பால் வெள்ளை நிறம், இலங்கை ஒரு தீவு. நான் கொழும்பக்குப் போகிறேன் போன்ற கூற்றுகள் இத்தகையன. இரண்டாவது, உணர்ச்சிச் செயற்பாடு **(Emotive function)**. பேசுவோன் எதைப் பற்றிப் பேசுகிறானோ அது பற்றிய அவனது மனப்பாங்கின், மன நிலையின், உணர்ச்சியின் வெளிப்பாடாக மொழி அமைவதை இது குறிக்கும்.

**(நாளை தொடரும்......)**

# ஆசிரியர் காரணமின்றி தாக்கப்பட்டார் பொலிசாருக்கு நீதிமன்றம் அபராதம்

(நமது நிருபர்)'

ஒரு பாடசாலை ஆசிரியரை காரணமின்றிக் கைது செய்து தாக்கியமைக்காக இரு ரிசேர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு கடந்த செவ்வாயன்று மேல் நீதிமன்றம் 30,000 ரூபா அபராதம் விதித்துள்ளது.

ஹபரக் கடலைச் சேர்ந்த புஷ்பா பிரியந்த என்கின்ற கற்றன் பெரியாய பாடசாலையைச் சேர்ந்த மேற்படி ஆசிரியர். தனது பாடசாலை அதிபருடன் பஸ் நிலையமொன்றில் நின்றிருந்த சமயம், அவ்விடத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும், ஆசிரியரிடம் குறிப்பிட்ட ஒரு நபரைப் பற்றித் தகவலேதும் தெரியுமா என்று வினவினராம்.

இவர் தெரியாதெனக் கூறவே, ஆசிரியரது அடையாள அட்டையைப் பொலிஸார் கோரியுள்ளனர்.

துரதிஷ்டவசமாக ஆசிரியரிடம் அடையாள அட்டையும் இல்லாதிருக்கவே, ஆசிரியுரது சொந்த இடத்தைக் கேட்ட பொலிஸார் அவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்பதை அறிந்ததும், ஆசிரியரை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற பொலிசார் ஒரு தனி இடத்தில் வைத்து அவரைத் தாக்கியுள்ளனர்.

அவ்வேளை அவ்விடத்தில் ஒரு வாகனம் வரும் சத்தத்தைக் கேட்டுப் பொலிசார் நழுவிடவே, ஆசிரியர் ஒருவாறு தப்பி வந்து முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து மேல் நீதிமன்றம் ஒவ்வோர் பொலிசாருக்கும் 5000 ரூபா அபராதம் விதித்ததுடன் அரசு பாதிக்கப்பட்டவருக்கு 20,000 ரூபா செலுத்த வேண்டும் எனவும் தீர்ப்பளித்தது.

## துவிச்சக்கர வண்டி மூலம் நகரசபை வருமானம்

(ஏ.எல்.எம்.பழுலுல்லாஹ்)

காத்தான்குடி நகர சபை பிரிவுக்குட்பட்ட துவிச்சக்கர வண்டி பாவனையாளர்கள் சுமார் 12,000 பேர் உள்ளனர். இருந்தும் 3000ம் அநுமதிப் பத்திரங்களையே நகரசபை விற்பனை செய்து வருவது வழக்கமாகும்.

இம்முறை கூடுதல் லைசன்களை விற்பனை செய்வதற்கு சபையின் அதிகார மளிக்கப்பட்ட உத்தியோத்தர் எம்.சி.எம். சரீப் நகர சபையின் செயலாளர் பி.புவனேந்திரராஜாவை பணித்துள்ளார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக சபையின் வருமானப்பரிபாலகரினால் மெயின் வீதிகளில், பாடசாலைகளில் பாதசாரிகள் இடைநிறுத்தப்பட்டு அநுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை இடம்பெறுவதாகவும் இம்முறை கூடுதல் வருமானம் நகர சபைக்கு எட்டலாம் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

## முதல் திகதி தொடக்கம் பனையோலைப் பயிற்சி

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றமும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடாத்தவுள்ள யுவதிகளுக்கான ஒரு வருட ''பனையோலை கைப்பணிப் பயிற்சி நெறி'' ஏப்ரல் முதலாம் திகதி மருதமுனையில் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர் திருமதி.யோகேஸ்வரி சௌந்தரநாதன், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ்.எம். ஏ.காதர், கல்முனைப் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம்.ரீ.ஏ.ஹாறூன் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

## அதிகாரிகளினால் புறக்கணிப்பாம்

(மூதூர் நிருபர்)

காரைதீவுக் கல்விக் கோட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் அதிகாரிகளினால் புறக்கணிக்கப்பட்டு வருவதாக பெற்றோர்கள் இலங்கை இஸ் லாமிய ஆசிரியர் சங்கத்திற்கு முறையிட்டுள்ளனர்.

கல்முனைக் கல்வி வலயத்திலுள்ள அல்.அஸ்ரப் வித்தியாலயம், அல் - அஸ்ரப் வித்தியாலயம், அல்- ஹிசைனிய்யா வித்தியாலயம், சபினா வித்தியாலயம் ஆகியன காரைதீவுக் கல்விக் கோட்டத்தில் வருகின்றன.

இப்பாடசாலைகளில் நீண்டகாலமாக ஆசிரியர், மற்றும் தள பாடங்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றன.

இத்தகைய பல அடிப்படைத் தேவைகளைப் பெற்றுத் தரக் கோரி விடுவிக்கப்பட்ட கோரிக்கைகள் யாவும் அதி காரிகளினால் அலட்சியப் படுத்தப்பட்டு வருவதாகவும், வலயக் கல்வி அலுவலகமோ, மாகாணக் ல்வி அமைச்சோ இவ்விடயத்தில் கவனம் செலுத்துவதில்லை எனவும் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இக்கல்வி வலயத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிகமாகக் காணப்பட்டும், முறையான இட மாற்றுத் திட்டம் ஒன்று ஈன்மையினால் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் அம் முறையீட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறையிட்டை ஏற்றுக் கொண்ட இலங்கை இஸ் லாமிய ஆசிரியர் சங்கம் அடுத்து வரும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் சந்திப்பின்பொது இவ் விடயங்களை ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரவி ருப்பதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் அல்ஹாஜ் எம். அனஸ் தெரிவித்தார்.

## கடத்தப்பட்ட மீனவர் 15 பேரும் விடுதலை

(நமது நிருபர்)

நேற்று முன்தினம் பிற்பகல் புல்மோட்டைப் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகளினால் கடத்திச் செல்லப்பட்ட 15 மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

புல்மோட்டை கடற் பரப்பில் மீன்பிடித்தலில் ஈடுபட்டிருந்த 15 மீனவர்களும் பிற்பகல் 1.30 மணியளவில் கடத்திச் செல்லப்பட்டதாகவும் பின் விடுதலை செய்திருப்பதாகவும் புல்மோட்டைப் பொலிசார் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பிலிருந்தும் கினிதுமை யாத்திரை

(நமது நிருபர்)

வழமைபோலவே இம் முறையும் கிறிஸ்தவர்களின் பிரபலமான வணக்கஸ்தலமான கினிதுமைக்கு பெருமளவு எண்ணிக்கையிலான யாத்திரிகர்கள் பயணம் செய்வதை அவதானிக்க முடிகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்வேறு ஆலயப் பங்குகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவர்களல் லாதவர்களும் கூட இவ்வாறு அதிகளவில் கினிதுமைக்குச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

## பயிற்சிக்கு 34 பேர் தெரிவு

(நற்பிட்டிமுனை நிருபர்)

சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களினால் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளிலிருந்து 06 மாத சிற்றூழியர் பயிற்சித் திட்டத்தின் கீழ் கல்முனை இலங்கை மின்சார அலுவலகத்திற்கு 34 பேர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, சம்மாந்துறை, சாய்ந்தமருது, கல்முனை, நாவிதன்வெளி, பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப் பட்ட 34 பேர்களுக்குரிய வேலைப் பங்கீடுகள் கல்முனை மின்சார சபை பொறியியலாளர் சாகீர் ஹுசைனால் அண்மையில் வழங்கப்பட்டது.

## அனுமதிப்பத்திரம் இன்றி வெட்டப்பட்ட மரங்கள் பறிமுதல்

(நற்பிட்டிமுனை நிருபர்)

மஹியங்கனை மேலதிய வன அதிகாரி நற்பிட்டிமுனை எம்.ஏ.எம்.ஜாயா தலைமையில் சென்ற குழு தம்மானப் பகுதியில் நடாத்திய துரித தேடுதல் நடவடிக்கை காரணமாக அனுமதியின்றி வெட்டப்பட்ட பெருந்தொகையான பெறுமதிமிக்க காட்டாமணக்கு, கருங்காலி, போன்ற மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. வனத் திணைக்கள அனுமதிப் பத்திரமின்றி வைக்கப்பட்டிருந்த இம் மரங்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு மஹியுங்கனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மேலதிக வன அதிகாரி எம்.ஏ.எம்.ஜாயா தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

## தொழிலாளர்களுக்காக காத்து நிற்கும் சிங்களத் தரகர்கள்

(நமது நிருபர்)

நெல் அறுவடை மற்றும் சூடடிப்பு ஆரம்பமாகியுள்ளதால், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தினமும் 300 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வெளிமாவட் டங்களுக்குத் தொழிலுக்காகச் சென்று வருகின்றனர்.

பெரும்பாலும் சிங்களப் பகுதிகளுக்கே செல்லும் இந்த தமிழ் தொழிலாளர்கள் வாகனங்களில் தொங்கியபடி பயணம் செய்வதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு பயணம் செய்து செல்லும் தொழிலாளர்களை அழைத்துச் செல்வதற்காக சோதனைச் சாவடிகளில் சிங்களத் தரகர்கள் காத்து நிற்பதையும் காண முடிகிறது.

இதேவேளை, கடந்த காலங்களில் இவ்வாறு வேலைகளுக்காக பிற இமாவட்டங்களுக்குச் சென்ற தொழிலாளர்கள் சிலர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டமையும், சில தொழிலாளர்கள் காணாமல் போனமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கோயில் நிர்வாகப் பிரச்சினைக்குத் தீர்வு

(நற்பிட்டிமுனை நிருபர்)

அண்ணமலைக் கோயில் நிர்வாகத்தில் ஏற்பட்ட பிரச்சினை அம்பாறை அரச அதிபர் விடுத்த பணிப்புரைக்கிணங்க, நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எம். கோபாலரெத்தினம் மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் முன்னிலையில் அண்மையில் புதிய நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டு ஆவணங்களும், பொறுப்புக்களும் பிரதேச செயலாளரினால் புதிய நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## நினைவு தினம்

(ஏ.எல்.எம்.பழுலுல்லாஹ்)

காத்தான்குடி முன்னாள் பட்டின ஆட்சிமன்றத் தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சியின் அமைப்பாளருமான அஷ்ஷஹீட் ஏ.அஹமதுலெப்பையின் 12வது நினைவுதினக் கூட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) காத்தான் குடியில் நடைபெறவுள்ளது.

## கடற்கரையில் மாணவர் சிரமதானம்

(மருதமுனை ஹரீஷா)

மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலையின் க.பொ.த. (உ/தர) முதலாம் ஆண்டு மாணவர்களால் மருதமுனைக் கடற்கரை சிரமதானம் செய்யப்பட்டது.

அரசின் புதிய கல்விச் சீர்திருத்தக் கொள்கையின் பாட செயற்திட்டமாகவே இந்த சிரமதானம் கடந்த 26ம் திகதி மேற்கொள்ளப்பட்டது. இச்சிரம தானத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஏ.ஆர்.எம்.உவைஸ் ஆசிரியரின் தலைமையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. ஒன்பது ஆசிரியர்களும் மூன்று ஆசிரியைகளும் ஒன்றிணைந்து மாணவர்களை நெறிப்படுத்தினர். பிரதி அதிபர் எஸ்.எல்.ஏ.றகீம் சிரமதானத்தை மேற்பார்வை செய்தார்.

இச்சிரமதானத்தின் மூலம் கடற்கரை மிகவும் நேர்த்தியாகக் காட்சியளிக்கிறது. பொதுமக்கள், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றனர்.


சிறு விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

மட்டக்களப்பு மா நகர பிரிவில் இல.8 மருதடி வீதி மட்டக்களப்பு எனும் முகவரியில் 34 பேர்ச் காணியும், இல515/84, திருமலை வீதி, மட்டக்களப்பு எனும் முகவரியில் 25 பேர்ச் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு செயலாளர், மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லம், இல.85, 3ம் குறுக்குத்தெரு, மட்டக்களப்பு.

தொலைபேசி:- 065-23442
065-24513

# பல்வேறு குற்றச்சாட்டுகளையொட்டி தி.மு.க. வில் ஆறு மந்திரிகளுக்கு இடம் இல்லை: கருணாநிதி முடிவு

(சென்னை)

பல்வேறு குற்றச் சாட்டுகள் காரணமாக தி.மு.கவைச் சேர்ந்த ஆறு மந்திரிகளுக்கு இந்த முறை இடம்கிடைக்காது எனவும், இந்த முடிவுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி வந்துவிட்டார் எனவும் கூறப்படுகிறது.

தி.மு.க. அமைச்சரவையில் இடம்பெற் றுள்ளவர்களில் சில ருக்கு சீட்டு கிடைக்காது என பரவலாக பேசப்பட்டு வந்தது. இதனால் அமைச்சர்கள் ஒவ் வொருவரும் தங்கள் தொகுதிகளை மேம்படுத் துவதற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வந்தனர். இருந்தாலும் மக்களிடம் அவர்களுக்கு அதிருப்தி தொடர்ந்து இருந்து வந்தது. இந் நிலையில் முதல்வர் கருணாநிதி ஒவ்வொரு தொகுதிகளையும் சர்வே செய்ய பல குழுவை அனுப்பியிருந்தார். இந்த குழுவினர் 234 தொகுதிகளுக்கும் சென்று தீவிரமாக ஆய்வு செய்து அறிக்கையை கருணாநிதியிடம் சமர்ப்பித்தனர். இந்த அறிக்கையில் 14 அமைச்சர்கள் மீது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி நிலவியது தெரியவந்தது. ஏறக்குறைய 85 எம்.எல்.ஏ.க்களுக்கு மேல், பொது மக்கள் மிகவும் காட்டமாய் இருப்பதும் தெரியவந்தது. இதை அறிந்த கருணாநிதி மிகவும் அதிர்ச்சிக்குள்ளானார்.

குற்றச்சாட்டு கூறப்பட்ட அமைச்சர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் தனித்தனியே சந்தித்து தொகுதிகளை சரிப்படுத்தும்படியும் மக்கள் மத்தியில் நல்லபெயரை எடுக்கும்படியும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படியும் உத்தரவிட்டார்.

அதன்படி அந்த எம்.எல்.ஏ.க்களும், மந்திரிகளும் தங்கள் தொகுதிகளை மேம்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்களை கடந்த மூன்று மாதங்களாக செயல்படுத்தினர். இருந்தாலும் அவர்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

இந்நிலையில் மற்றொரு ஆய்வு குழுவினர் கொடுத்த அறிக்கையின்படி மக்கள் தொடர்ந்து அதிருப்தியில் இருப்பது தெரியவந்தது. இதையொட்டி குற்றம் சாட்டப்பட்ட 14 மந்திரிகளில் 6 பேருக்கு சீட்டு தருவதை நிறு த்துவதன் மூலம் மக்கள் மத் தியில் தி.மு.க.வுக்கு நம்பிக்கை வந்துவிடுமென கருணாநிதி கருதினார். இதனடிப்படையில் ஆறு மந்திரிகளையும் தேர்வு செய்தார். இதில் அந்த பட்டிய லில் முதலில் இருப்பவர் அமைச்சர் பெங்களூர் பழனிச்சாமி என்று கூறப் படுகிறது. இவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு இருந்தபோதும் ஊட்டியில் திரைப்பட துறையினருக்கு விதியை மீறி படப்பிடிப்பு நடத்த அனுமதி அளித்த குற்றச்சாட்டை மக்கள் இன்னும் மறக்காமல் இருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. இரண் டாவது இடத்தில் இருப்பவர் அமைச்சர் எஸ்.பி.சற்குணம். இவர் மீது பொதுமக்களுக்கு நல்ல அபிப்ராயம் இல்லை. இவருடைய தொகுதியை ம.தி.மு.க.வுக்கு ஒதுக்கவேண்டு மென வலியுறுத்தி வருகிறார்களாம். இவர் தன்னுடைய தொகுதியில் எவ்வித பணிகளையும் சரிவர செய்யவில்லை என்று குற்றச்சாட்டு நிலவுகிறதாம். மேலும் இவர் சார்ந்த துறையில் பல தவறுகள் நடந்துள்ளதாகவும் அந்த புகாரை ஒட்டி இவருக்கும் இடம் கிடைக்காது எனவும் கூறப்படுகிறது.

மூன்றாவது இடத்திலிருப்பவர் அமைச்சர் பிச்சாண்டி. இவர் வீட்டுவசதி வாரியத்தில் பல்வேறு தவறுகள் நிகழ காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டு நிலவுகிறதாம். மாவட்டத்தில் இவருக்கு நல்லபெயர் இல்லையாம். இதனால் இவருக்கும் சீட்டு கிடைப்பது கஷ்டம் எனக்கூறப்படுகிறது.

பட்டியலில் நாலாவது இடத்தில் இருப்பவர் சமயநல்லூர் செல்வராஜ். இவர் ஆதி திராவிட மக்களுக்கு தேவையான சலுகைகள் எதையுமே அரசிடம் கேட்டு வாங்கித் தரவில்லையாம். இன்று ஏராளமான சொத்துக்கு அதிபதியாக இருக்கிறாராம். இது அந்த தொகுதி மக்களையே கேள்விக்குறியாக கேட்க வைத்திருக்கிறது. இம்முறை அவர் தேர்தலில் போட்டியிட்டால் எதிர்த்து ஓட்டுபோட அந்த தொகுதி மக்கள் முடிவு செய்திருப்பதாகவும் அந்த தகவலை ஒட்டி அவருக்கும் சீட்டு கிடைப்பது சந்தேகம் எனவும் கூறப்படுகிறது.




## கருணாநிதியால் ஊழலற்ற நல்லாட்சி தர முடியாது வாழப்பாடி கருத்து

ஊழல், ஜாதி, வன்முறை மூன்றையும் வைத்துக்கொண்டு கருணாநிதியினால் நல்லாட்சி தர முடியாது என்று தமிழக ராஜீவ காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராம மூர்த்தி கூறினார். நேற்று த.ரா.கா. வின் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டம் முடிந்து வெளியில வந்த அவர் நிருபர்களிடம் இவ்வாறு கூறினார்.

அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:_

கேள்வி: முன்பு பலகட்சிகளை ஒன்று சேர்த்து கடந்த தேர்தலில் தி.மு.க. வெற்றிக்கு உறுதுணையாக இருந்தீர்கள். அப்படிப்பட்ட உங்களை கருணாநிதி வெளியில் அனுப்பினாரா? நீங்களாக வெளியேறினீர்களா?

பதில்: வெளியேறும் நிலையை உருவாக்கி விட்டார் கருணாநிதி

கேள்வி: தி.மு.க. அணிக்கு மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்வார்களா?

பதில்: தி.மு.க. அணியிலுள்ள கட்சிகளின் முகவிலாசத்தை பார்த்தாலே மக்கள் புரிந்து கொள்வார்கள் தி.மு.க.வுக்கு ஆதரவு அளிப்பார்களா என்பதைவிட வனமுறைக்கு வாக்களிக்க வேண்டுமா என்று சிந்திப்பார்கள்.

கேள்வி: அரசியலில் நிரந்தர நண்பரும் இல்லை. பகைவருமில்லை என்ற அடிப்படையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா உங்களை அழைத்தால் அந்த அழைப்பை ஏற்று பேசுவீர்களா?

பதில்: இதுகுறித்து எங்கள் அரசியல் உயர்மட்டக்குழு முடிவு செய்யும்.

கேள்வி: ம.தி.மு.கவுக்கு சரியான தொகுதிகள் ஒதுக்கபடவில்லை என்று கூறப்படுகிறதே? அதனால வைகோ கூட்ட ணியிலிருந்து வெளியேறுவாரா?

பதில்: வைகோ புலிகளின் ஆதரவாளர். புலிகளின் கேந்திரஸ் தபானமான ஸ்டூடண்ட்ஸ் ஜெராக்ஸ் நிறுவனம், சர்வேதச சான்றோர்கள் மன்றம் ஆகியவற்றில் 25 நாட்களுக்கு முன் மத்திய அரசு நிதிதுறையின் சார்பாக ரெய்டு நடததப்பட்டது. அப்போது உடனே டெல்லி பறந்த வைகோ அந்த ரெய்டு நடக்காமல் உடனே தடுக்க ஏற்பாடு செய்தார். அதனால் தே.ஜ. கூட்டணியை இப்படிப் பயனபடுத்திக் கொள்ளும் அவர், இந்தக் கூட்டணியிலிருந்து வெளியேற மாட்டார்.



இந்தியாவிலே தயாரிக்கப்பட்ட ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட், தொழில்நுட்ப கோளாறு காரணமாக அதன் பயணம் நிறுத்தப்பட்டது. அந்த ராக்கெட்டினை படத்தில் காணலாம். இப்படம் கடந்த

## குஜராத்தில் பூகம்பத்தில் பாதித்த பகுதிகளை கிளின்டன் பாரக்கிறார்

(புதுடெல்லி)

இந்தியாவிற்கு ஒரு வாரகால பயணமாக வரும் அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டன் குஜராத்தில் பூகம்பத்தால் பாதித்த பகுதிகளை பார்வையிடுகிறார்.

அமெரிக்க அதிபராக இருந்த பில் கிளின்டன் கடந்த ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவில் அதிகாரப்பூர்வ சுற்றுப் பயணத்தை மேற்கொ

இந்தியா வரும் அதிபர் பில்கிளிண்டனுக்கு முன்னாள் அதிபர் என்ற முறையில் அவருக்கு முழுமரியாதை கொடுக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் நேற்று டெல்லியில் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் கூறினார்.

வருகின்ற ஏப்ரல் 3-ம் தேதி விமானம் மூலம் டெல்லி வரும் பில்கிளிண்டன் அடுத்த நாள் நேராக வாடகை விமானம் மூலம் அகமதாபாத் நகருக்கு செல்கிறார். குஜராத்தில் பூகம்பத்தால் பாதித்த பகுதிகளை பார்வையிடுகிறார். மாநில அரசு அதிகாரிகள் மற்றும் மறுவாழ்வு பணிகளில் ஈடுபட்டிருக்கும் அரசு சாரா அமைப்பு பிரதிநிதிகளை ண்டார்.

தற்போது அமெரிக்க அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ள பில்கிளின்டன் வருகின்ற ஏப்ரல் 3-ம் தேதி இந்தியாவுக்கு ஒரு வாரகால பயணமாக வருகின்றார் குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட பூகம்பத்தால் பாதித்த பகுதிகளை பார்வையிடுகிறார். பின்னர் பிரதமர் உட்பட பல தலைவர்களையும் சந்தித்து பேசுகிறார்.

சந்தித்து பேசுகிறார்.

ஏப்ரல் 5-ம் தேதி பூகம்பத்தில் பெரிதும் பாதித்துள்ள புஜ் நகருக்குச் சென்று பார்வை யிடுகிறார். அன்றே மும்பைக்கு புறப்பட்டுச் செல்கிறார். 7-ம் தேதி அன்று கல்கத்தாவுக்குச் செல்கிறார். அங்கு அன்னை தெரசா அனாதை இல்லத்திற்குச் செல்கிறார். அன்றைய தினமே டெல்லி திரும்புகிறார். டெல் லியில் கிளிண்டனுக்கு பிரதமர் வாஜ்பாய் விருந்து அளிக்கிறார். 8-ம் தேதி அன்று உத்திர ப்பிரதேசத்தில் உள்ள ராம் பூருக்கு செல்கிறார். அங்கிருந்து டெல்லி திரும்புகிறார். பின்னர் ஏப்ரல் 10-ம் தேதி லண்டனுக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

# தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செலுத்தப்படவிருந்த ராக்கெட் ரத்து

(சென்னை)

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நேற்று விண்ணில் செலுத்தப்படவிருந்த ராக்கெட் செலுத்தப்படவில்லை. நிகழ்ச்சி ரத்தானது.

இதுபற்றிய விபரம் வருமாறு:-

நாட்டின் வளர்ச்சிக்கு விண்வெளியை கைகொள்வதென முடிவு செய்து 1972-ம் ஆண்டு விண்வெளி ஆணை யத்தைத் துவக்க அரசு திட்டம் வகுத்தது. அதற்கென இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) என்ற நிறுவனம் துவக்கப்பட்டது. இஸ்ரோ, முதலில் அணுசக்தித் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதன் தலைமையகம் பெங்களூரிலும், பிற மையங்கள் நாகர்கோவில் மாவட்டத்தில் உள்ள மகேந்திரபுரி உள்பட 11 இடங்களில் உள்ளது.

இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் ஆர்யபட்டா, ரஷ்யாவின் துணையோடு 1975-ம் ஆண்டு விண்ணில் ஏவப்பட்டது. தொடர்ந்து வேறு சில நாடுகளில் ராக்கெட் துணை கொண்டு பாங்கரா 1 மற்றும் 2 விண்ணை வலம் வரத் துவங்கியது.

முழுக்க முழுக்க இந்திய விஞ்ஞானிகளின் முயற்சியால் GSLV (பூமி நிலை செயற்கைக் கோள் ஏவு வாகனம்) 1540 கிலோ எடை கொண்ட G.Sat-1 செயற்கைக் கோளை விண் ணில் செலுத்த, மார்ச் 28-ந் தேதி, நாள் குறிக்கப்பட்டது.

அதன்படி அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. சென்னையை அடுத்த ஸ்ரீஹரி கோட்டா ஷார் ஏவுதளத்தில் பத்திரிகையாளர்கள், பொதுமக்கள், மாணவ-மாணவிகள் ஏராளமானோர், ஆவலுடன் காத்து நின்றனர். வானிலை மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

சரியாக 3.47 மணிக்கு, ராக்கெட்டை விண்ணில் செலுத்து வதற்கான பொத் தானை அழுத்தியவுடன் ஏதும் நிகழாமல், திடீரென பெரிய சத்தம் கேட்டது. நெருப்பும், புகையும் ராக்கெட்டை சூழ்ந்து கொள்ள, ராக்கெட் விண் ணை நோக்கிப் பாயவில்லை.

என்ன நடந்தது என்பது குறித்து இஸ்ரோ தலைவர் கே.கஸ்தூரிரங்கன் நிருபர்களிடம் பேசியதாவது:-

ஏவுதலுக்கு 10 நிமிடம் முன்பு, தானியங்கி ஏவுமுறையை தன்னகத்தே பொறுப்பேற்ற, கணிணி ராக்கெட்டின் பக்க வாட்டில் உள்ள மோட் டார்க 0ை 3ளைச் செலுத்துவதற்கான ஆணை இட்டது. மோட்டார்கள் இயங்கத் துவங்கிய 3 வினாடிகளில் தானியங்கி பாதுகாப்பு இயக்கம் செயல்படத் துவங்கியது.

ராக்கெட் விண்ணில் பறக்க, பக்கவாட்டு மோட்டார்கள் நான்கும் 90 சதவிகித உந்து சக்தியைப் பெறவேண்டும். ஆனால் இம்முறை அவற்றில் ஒன்று போதுமான சக்தியை உருவாக்காததால் திட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று கூறினார். ஆனால் பாதுகாப்பு இயக்கம் சரியாகச் செயல்பட்டு ராக்கெட்டை பெரும் சேதத்திலிருந்து காப்பா ற்றியுள்ளது. இங்கு நடந்தது குறித்து பிரதமர் வாஜ்பாயைத் தொடர்பு கொண்டு பேசினோம். அதற்கு அவர் வெற்றி-தோல்வி சகஜம், தொடர்ந்து முயற்சி செய்யுங்கள் என்றார்.

# ''வேலையில்லாப் பிரச்சினைக்கு கல்வித்திட்ட குறைபாடே காரணம்

## – கல்விக்கல்லூரி பீடாதிபதி –

(நமது நிருபர்)

வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் படித்த இளைஞர், யுவதிகள் வேலையில்லாத திண்டாட்டத்தால் மன விரக்தி அடைந்திருக்கிறார்கள். சமுதாயத்தின் அந்த இளங்குருத்துக்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். நமது கல்வித் திட்டத்தில் பாரிய குறையபாடு புரையோடியுள்ளதையே இந்த நிலவரம் காட்டுகிறது.

இவ்வாறு மட்டக்களப்புக் கல்விக் கல்லூரி பீடாதிபதி என்.நடராசா கடந்த வெள்ளிக்கிழமை நடந்தேறிய மட்/கல்லடி முகத்துவாரம் விபுலாநந்த வித்தியாலயத்தின் நாற்பதாவது ஆண்டு பாடசாலை தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வித்தியாலய அதிபரும் சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருது பெற்றவருமான வ.சொக்கலிங்கம் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

பீடாதிபதி நடராசா தமதுரையில் விபரித்ததாவது:-

''படித்த இளைஞர், யுவதிகளிடையே ஏற்பட்டுள்ள மனவிரக்தி மனக் கவலையைத் தருகிறது. கல்வித் திட்டத்தில் உரிய மாற்றம் கொண்டு வரப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கிறது. இக்கல்வித்திட்ட மாற்றத்தை நமது வள்ளுவப் பெருந்தகை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே விதந்துரைத்திருக்கிறார். ''கற்க கற்பவை கற்றவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார். அதாவது ''கற்பவை" என்னும் அவரது சொல்லாட்சியை நாம் கவனிக்க வேண்டும். எல்லாவற்றையும் கற்பதல்ல. கற்க வேண்டும். கால, தேச, வர்த்தமானங்களுக்கு ஏற்ப கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டும். அப்படியல்லாத கல்வியைக் கற்று யாருக்கும் பயனில்லை. வேலையில்லாத திண்டாட்டம் ஏற்பட்டு இளம் சமுதாயம் விரக்தி அடைந்து நாடும் சமூகமும் அல்லோலகல்லோலப்பட நேரிடும். இதனை மனதில் இருத்தி இன்றைய நவீன மாற்றங்களுக்கு ஏற்ப கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டும். அப்படியல்லாத கல்வியைக் கற்பதால் யாருக்கும் பயனில்லை. வேலையில்லாத திண்டாட்டம் ஏற்பட்டு இளம் சமுதாயம் விரக்தி அடைந்து நாமும் சமூகமும் அல்லோலப்பட நேரிடும். இதனை மனதில் இருத்தி இன்றைய நவீன மாற்றங்களுக்கு ஏற்ப கற்க வேண்டியவற்றை இனங்கண்டு, குறிப்பாக கணணி யுகத்துக்கு ஏற்ற கல்வியை நாம் பெற வேண்டும்".

பிரபல பத்திரிகையாளர் வீ.சு.கதிர்காமத்தம்பி அங்கு ஸ்தாபகர் நினைவுப் பேருரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:- நாற்பது வருடங்களுக்கு முன்னர் காடாய்க் கிடந்த இவ் வித்தியாலயக் காணியை தமது சொந்தச் செலவில் காடு வெட்டிக் கல்விக் கூடமாக்கிய மட்டு நகர் முன்னாள் துணை மேயர் எஸ்.தர்மசேனா கடந்த மாதம் அமரராகிவிட்டார். கல்லடி முகத்துவாரத்தில் பாடசாலை ஒன்றைப் புதிதாகக் கட்டி எழுப்பியதோடு அதனை அரசினர் பொறுப்பேற்கும் வரை மாணவர்களுக்கு தமது சொந்தப் பணத்தில் மதிய உணவு வழங்கினார். போதித்தார். கல்வித் திணைக்களம் இப்பாடசாலையைப் பொறுப்பேற்கும் போது அதன் ஆளணியைப் பற்றி நிபந்தனை விதித்தது. அப்பொழுது அமரர் தர்மசேன தாமாகவே தமது அதிபர் பதவியை விடுத்து, அங்கு கற்பித்த பெண் ஆசிரியைகள் இருவருக்கு விட்டுக் கொடுத்துவிட்டு வர்த்தகத் துறையில் ஈடுபட்டார். அவரது அந்த நல்லவுள்ளம் அன்னாரைப் பிற்காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலில் துலங்குவதற்கும் வர்த்தகத் துறையில் பிரகாசிப்பதற்கும் வழி சமைத்தது. இன்றைய இவ்வித்தியாலயத்தின் பொற்காலம் ஆரம்பித்தது. „இன்று கொழும்பு றோயல் கல்லூரியோடு ஒப்பிடுமளவிற்கு இவ்வித்தியாலயம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் வெற்றியீட்டியுள்ளன. விபுலானந்த அடிகளாரின் ஆத்ம சக்தி இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும்" என்றார்.

மட்டக்களப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.துரைராஜசிங்கம் சிறப்புரை நிகழ்த்தினார்.

வித்தியாலய முன்னாள் அதிபர்களில் ஒருவராகிய திருமதி ஆர்.வர்ணகுலசிங்கம் உட்பட முன்னாள் ஆசிரியர்களும் ஏராளமான பெற்றோரும் கலந்து கொண்ட இவ்விழாவில் வித்தியாலய மாணவி யோ.ஜெயந்தினி வரவேற்புரையும், க.சுபாஜனி அறிக்கை சமர்ப்பித்தும், இ.துசாந்தி நன்றியுரையும் நிகழ்த்தினர்.

# நட்சத்திரப் பலன் – 04

## ரோகினி

மைவிழி மாதரோடு மனமிகவுடையனாகும்
பொய்யுரை யொன்றுஞ் சொல்லான் புகழ் பெறவாழ வல்லன்
நெய்யொடு பாலுங்கூட்டி நிரம்பவே கல்வீ கற்கும்
உய்யவே பகீர்ந்திட்டுண்ணா முரோகிணி நாளினாளே.
(மரண கண்டி சாஸ்திரம்)

ரோகினி நட்சத்திரத்தின் அதிபதியும் சந்திரனே. எனவே, ரோகினியில் சந்திரன் சஞ்சரிக்கும் போது பிறந்தவர்வள். இவர்களிடம் சந்திரனின் இருமடங்கான சக்தி வேகம் பரவிநின்று அவர்களை வழிநடத்தி வைக்கும்.

ரோகினி ரிஷபராசியின் 10 ஆவது பாகை முதல் 23-20 பாகை வரையும் அமைந்து விளங்குவது.

இருமடங்கு சந்திரசக்தியும் ராசிநாதனான சுக்கிரனின் சக்தியும் சேர்ந்து, இவர்களின் உலக வாழ்வை உருவாக்கி நடத்திச் செல்லும்.

**பொதுவான குணங்கள்**

'ரோகினியில் பிறப்பது புண்ணியம்' என்பார்கள். கிருஷ்ண பகவானின் பிறந்த நட்சத்திரம் இது. அவரைப் போலவே பலரையும் வாழவைக்கும் தன்மையும் சக்தியும் கொண்டவர்கள். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் என்று கருதலாம்.

இவர்கள் சத்தியத்தை மதிப்பவர்கள். சத்திய சீலர்கள் என்னும் புகழையும் பெறக்கூடியவர்கள். ஒழுக்கங்களைப் போற்றுகின்றவர்கள். ஒழுக்கமான வராகவும் மதிக்கப் பெறுபவர்கள்.

தம் பொருளையும் உழைப்பையும் பிறருக்கு உதவியாகத் தருபவர்களே தவிரப் பிறரது பொருளில் சிறிதும் அடைவதற்கு விரும்பாதவர்கள் இவர்கள். கேட்பவர்கள் மேலும் கேட்பதற்கு ஆசைப்படுமாறு நயமாகப் பேசுகின்ற வாக்கு வன்மையைப் பெற்றவர்கள். இப்படியே நிலையான புத்தியும் பெற்றவர்கள். ஒன்றைச் செய்வதற்கு முடிவு செய்துவிட்டால் எந்த நிலையிலும் அந்த முடிவை விட்டு மாறவே மாட்டார்கள். இந்த மனவுறுதி பெற்றவர்கள் இவர்கள்.

அழகும் கவர்ச்சியும் கொண்ட உடல்வாகைக் கொண்டவர்கள். இதனால். இவர்களுக்கு எவரும் வசியமாகி இவர்களுடன் ஒத்துழைப்பார்கள். இவர்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள்.

பசித்துவரும் எளியவர்களுக்கு அன்னமிட்டுப் பசிபோக்கும் இயல்பு மிகவும் அமைந்தவர்கள். இதனால் புண்ணியவான் என்ற பெயரையும் பெற்றுவிடக் கூடியவர்கள்.

பால் மற்றும் நீர்பாங்கான சுவை நீர்களை விரும்பி அருந்துபவர்கள். கண்கள் தொடர்பான உபாதைகளும் அடிக்கடி இவர்களுக்கு ஏற்படக்கூடும். சிலருக்கு பாதப்பகுதியில் ஏதாவது குறை காணப்படுவதும் உண்டு. நெற்றி சிறுத்திருப்பவர்கள் இவர்கள் என்றும் கூறுவார்கள்.

இவர்களிடம் சுகபோகங்களில் மிகுதியான இச்சை காணப்படும். இந்த வகையில் சிலர் எல்லை மீறிப் போய்விடுவதும் உண்டு. பண வசதிகள் தேவைக்கு மேலாகவே எப்படியும் இவர்களிடம் அமைந்து விடும். எனவே வசதிக்குறை ஏதும் இராது.

இந்த நட்சத்திரத்தில் ருதுவாகும் பெண்கள் வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வார்கள். குடும்ப வாழ்க்கை சிறப்பாக விளங்கும். சகல பாக்கியங்களும் குறைவில்லாமல் அமையும். புத்திரப் பேறும் வாய்த்து மலர்ச்சி தரும்.

ரோகினிக்குரிய ஜீவன் பாம்பு என்று கூறப்படுகிறது. பாம்பு தன்னளவில் அஞ்சி ஒதுங்குவது என்றாலும் மற்றவர்கள் பாம்பைக் கண்டு நடுங்குவார்கள். இதைப் போலவே இவர்கள் பயந்த சுபாவம் உள்ளவர்களானாலும்; மற்றவர்கள் இவர்களைப் பார்த்துப் பயந்து ஒதுங்குவார்கள்.

பெரும்பாலும் இரவு நேரங்களில் இவர்கள் ஊக்கத்துடன் எதையும் செய்து முடிப்பவர்களாகவும் இருப்பார்கள். பகலைவிட இரவுதான் இவர்களுடைய சக்தி பிரகாசிக்கும் நேரமும் ஆகும்.

நாவல் மரம் இவர்களுக்கு ராசியானது வீடுகளிலே வளர்த்தால் நன்மைபெருகும். நாவல்மரம் கனியைச் சொரிந்து பலரையும் இன்புறுத்துவது போலக் கைமாறு கருதாமல் இவர்களும் பிறருக்கு உதவுகின்றவர்கள் எனலாம்.

**பெண்கள் பற்றிய செய்திகள்**

அழகாக இருப்பார்கள். சுத்தமாக விளங்குவார்கள். திறமையாகக் குடும்பம் நடத்துவார்கள். இவர்கள் முனிதத்துவத்தை சேர்ந்தவர்கள் என்பார்கள்.

சுத்தமும் அழகும் இவர்களுக்குப் பிடிக்கும். பயமும் கோபமும் அதிகம். சிரிக்கச் சிரிக்கப் பேசி மகிழ்பவர்கள். வெளியே சென்று உலாவுவதில் மகிழ்ச்சி காண்பவர்கள். சிவப்பு நிறங்களில் அதிக நாட்டம் இருக்கும்.

அதிகாலையிலேயே எழுந்து விடுகிறவர்கள். குளிர்ந்ததும் இனியதுமான உண்டிவகைகளை விரும்பி உண்பவர்கள். குடும்ப வாழ்க்கையைக் குதூகலமாக நடத்தி மகிழ்பவர்கள்.

**நான்கு பாதங்கள்**

முதல் பாதத்தில் பிறந்தவர்கள்: சபலமான மனப்போக்கை உடையவர்களாக இருப்பவர்கள். பலபொருட்களையும் ஆசையோடு வாங்கிச் சேர்ப்பார்கள். எதிலும் எளிதாக மனநிறைவைப் பெறமாட்டார்கள். குற்றங்குறைகளையே மிகுதியாக நினைப்பார்கள். இது மேஷச் செவ்வாயின் நவாம்சம் பெற்றது. இவர்கள் காவல்துறை, படைத்துறை, போன்ற பணிகளில் சிறப்பாக விளங்குவார்கள். தமிழ்த் துறையிலும் செல்வாக்குடன் விளங்குவார்கள். எதையும் திறமையாகச் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள். கடுமையான சுபாவத்துடன் நடந்து கொள்பவர்கள்.

இரண்டாம் பாதத்தில் பிறந்தவர்கள்:- ரிஷபச் சுக்கிரனின் நவாம்சம் பெற்றவர்கள். நல்ல பண்புகளும் வசதிகளும் கலைஞானமும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்பவர்கள். நல்ல குணங்களும் இனிமையாகப் பழகும் தன்மையும் கொண்டவர்கள். பெரும்பாலும் நல்ல வருமானமுள்ள நிலையான வேலையில் நிம்மதியாக அமர்ந்துவிடுவார்கள்.

மூன்றாம் பாதத்தில் பிறந்தவர்கள்: மிதுன புதனை நவாம்ச நாதனாகப் பெற்றவர்கள். அறிவுள்ளவர்களாகவும், கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகவும் வாக்குச் சாதுரியம் பெற்றவர்களாகவும் காணப்படுவார்கள்.

சில யோக ஜாதகர்கள் புகழ்பெற்ற மகா கவிஞர்களாக விளங்கவும் கூடும். கலை ஞானமும் கவி வளமும் இவர்களிடம் பொங்கிப் பெருகும். இங்கிதம் குறையாமல் எல்லோரிடமும் கலந்து பழகுவார்கள்.

கணிதம், சோதிடம் போன்ற நுட்பமான கலைகளிலும் மிகவும் திறமை பெற்றவர்களாக இருப்பார்கள்.

**நான்காம் பாதத்தில் பிறந்தவர்கள்:**

கடகச் சந்திரனை அம்ச நாதனாகப் பெற்றவர்கள். மதிவலிமையும், புத்தி நுட்பமும், அடக்கமான போக்கும் பெற்றவர்கள். மற்றவர்களையும் தங்களைப் போலவே நேசிக்கும் மனிதாபிமானம் மிகுந்தவர்கள். சிலர் பிறர் பொருள்களைக் கூடத் தம் பொருளாகவே பாவித்து நடந்து கொள்வதையும் காணலாம்.

ஐம்பது வயதைத் தாண்டிவிட்டால் எழுபது வயதையும் கடந்து வாழும் ஆயுள் பலமும் பெற்றிருப்பார்கள்.

பொதுவாக அழகையும் ஆனந்தத்தையும், அமைதியையும் ஆராதிப்பவர்கள். இவர்களில் சிலருக்குக் கண்பார்வையில் ஏதாவது குறை இருப்பதும் உண்டு.

**பெயர்களின் அமைப்புப் பற்றி**

ரோகினிக்குரிய பெயரின் முதல் எழுத்துக்கள் முறையே ஓ.வா.வீ.வூ என்று கூறப்பட்டிருக்கிறது. வூ எழுத்தில் எந்தப் பெயரும் வருவதில்லை. எனவே, ஓ.வா.வீ.என்னும் எழுத்துக்களில் ஒன்றை முதலாகக் கொண்ட பெயர் அமைத்துக் கொள்ளலாம். வா.வி.என்னும் எழுத்தில் தொடங்கும் பெயர்கள் மிகுதியாக உள்ளன.

இவர்கள் உயர்ந்த நோக்கம் உடையவர்கள் என்பதால், எப்படியும் வாழ்வில் ஓர் உயரிய நிலையைப் பெற்றுவிடுவார்கள்.

**ரோகினி சுருக்கம்:-**

நேர்மையானவராக இருப்பார். உண்மையாக நடந்து கொள்வார். கடுமையாக உழைப்பார். அன்போடு பழகுவார். மனைவியிடம், அல்லது கணவரிடம் ஆதரவோடும் அன்போடும் பழகுவார். இனிமையாகப் பேசுவார். தானதருமம் செய்வார். மிகுந்த செல்வமுடையவராகவும் திகழ்வார்.

**வே.தவராசா**
**சோதிடர்**
**குருக்கள் மடம்**

# வாரம் ஒரு பாடசாலை

## பாடசாலை வரலாறு

01.10.1966ல் மட்/களுவாஞ்சிகுடி அ.த.க.பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது 05.05.1986ல் மட்/களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலயமாக பெயர் மாற்றப் பட்டு தனது 35 வருடத்தினை இவ் வருடத்தில் பூர்த்தி செய்கின்றது.




பாடசாலையின் முன்முகத் தோற்றம்

நான் இப்பாடசாலைக்கு வரும்போது தரம் 1 முதல் தரம் 5 வரையிலான வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மாணவர்தொகை 118 ஆசிரியர் தொகை 08 ஆகவும் இருந்தது. இப்பொழுது மாணவர்தொகை 353 ஆகவும் ஆசிரியர் தொகை 13ஆகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, பாடசாலைகளில் தரம் 1 முதல் தரம் 8 வரையிலான வகுப்புக்கள் உள்ளது.

இப்பாடசாலையில் **60'x20'x 108'x16'** அளவுள்ள இரு கட்டடங்கள் மட்டுமே இருந்தன. 1998ல் தற்காலிக கொட்டில் **60'x80'** ஒன்று அமைக்கப்பட்டது. இது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் அயராத முயற்சி என்பது குறிப்பிடத்தக்கதாகும். 2000ம் ஆண்டில் பாடசாலை மைதானத்திற்கு ஒரு விளையாட்டரங்கு **35'x20'** அமைக்கப் பட்டுள்ளது. மேலும் இவ்வருடத்தில் 90X25 அளவுகளில் இரு மாடிக் கட்டிடம் ஒன்று அமைக் கப்படவுள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இப்பாடசாலையானது 1992 முதல் பாடசாலை சீருடை, பாடசாலை இலட்சனை என்பன தெடர்ந்து வந்த ஆண்டுகளில் சீரமைக்கப்பட்டது. அத்துடன் தனக்கென ஒரு பாடசாலைக் கீதத்தினையும் உருவாக்கிக் கொண்டது.

கல்வி அபிவிருத்தியில் காலடி வைத்து அதன் பலனாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் படிப்படியாக முன்னேறி இன்றுவன்ர 15 மாணவர்கள்



பாடசாலை அதிபர் தேவானந் அதிபர் காரியாலயத்தில்

இப்பரீட்சையில் வெட்டுப் புள்ளியிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர். அதிலும் இப்பாடசாலையில் ஒரு மாணவி புலமைப் பரிசில் அறக்கொடை நிதியை இப்பாடசாலையிலேயே பெற்றுவருவதும் குறிப்பிடப்படுவது சாலச் சிறந்ததாகும். இப்பாடசாலையில் வளர்ச்சியின் போது 1993, 1998 ஆகிய வருடங்களில் ஆரம்பக்கல்விப் பொருட்காட்சியின்னயும், 1994ல் கல்விச் சுற்றுலாவினையும், 1999ல் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியினையும் நடாத்தியுள்ளது என்பது இப்பாடசாலையில் பொன் எழுத்துக்களால் பதிக்கப்பட வேண்டிய அரும் முயற்சிகளாகும்.

அவ்வப்போது இவ்வாறான பாடசாலை புறக்கிருத்திய நிகழ்வின்போது வருகை தந்த கல்வி அதிகாரிகளின் கூற்றுக்களுக்கமைய, இப் பாடசாலையினை புகழ்ந்து கூறியமையை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

இவ்வோட்டத்தில் இது போன்ற சிறிய பாடசாலைகளும், பெரிய பாடசாலைகளும் இருந்த போதிலும் இப்பாடசாலையின் நிகழ்வுகள் பெரிய பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகள் போல் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்க விடயமாகும்.




அதிபருடன் கற்பிக்கும் ஆசிரியர்கள்

இப்பாடசாலையில் இருந்து தமிழ்மொழித்தினம், ஆங்கிலதினம் விஞ்ஞான கணித தினம், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியான போட்டிகளில் இப்பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றியது. விசேடமானது. தமிழ்மொழித் தினத்தில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மூலம் அறக்கொடை பெறும் மாணவி செல்வி.ம.ஜீவிதா மாவட்ட மட்டத்தில் பிரிவு இரண்டு கட்டுரை கடிதம் எழுதுதல் நிகழ்ச்சியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இதேபோல் செல்வன் த.முகிந்தன் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட மாணவர்கட்கான உயரப் பாய்தல் நிகழ்ச்சிக்கு சென்றமை இப்பாடசாலையின் வரலாற்றிலே ஒரு மைல்கல்லாகும் என்பதனை இங்கு குறிப்பிடாமல் விடுவது பொருத்தமற்றதாகிவிடும்.

இதுபோன்று மாவட்ட பொருட்காட்சியின் போது எமது பாடசாலை ஆரம்பப் பிரிவில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. 1999ல் பட்டிருப்பு கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான சஞ்சிகைப் போட்டி நிகழ்ச்சியில் இப்பாடசாலையில் பாலர் மேற்பிரிவில் 2ம் இடத்தினைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியது.

பாடசாலை மாணவர்கள் நலன் கருதி பாடசாலையில் ஒரு சிறிய நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு ஒரு கட்டட வசதி கூட இல்லை. மாணவர்கள் வாசிக்கும் ஆற்றலை வளர்ப்பதற்கு இது பெரிதும் பயன்படுகிறதென்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்நூலகம் நடமாடும் நூலகமாகவே காணப் படுகின்றது.

இப்பாடசாலையில் ஆங்கிலம், விஞ்ஞானம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லாதிருப்பது பெரும் குறையாகும். இவ்வாறான சூழ்நிலையிலும் ஆங்கிலப் போட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்றுவதற்கு ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர்களின் உதவி அளப்பரியதாகும்.

இப்பாடசாலையில் மாணவர் ஆசிரியர்கட்கான தளபாட வசதி பற்றாக்குறையாகவுள்ளது. அத்துடன் கட்டட வசதிகூட மிகவும் குறைவாகவே உள்ளது. வரும் ஆண்டில் தரம் 9 வகுப்பினை நடத்துவதற்கும் மாகாண கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வருடம் கடவுளுக்குச் சித்தமானால் இரண்டாந் தவணைத் தொடக்கத்தில் கல்விச் சுற்றுலாவினை மேற்கொள்ளவும் திட்டமுள்ளது.

## பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம்

கல்வியமைச்சானது புதிய கல்விச் சீர்திருத்தின் கீழ் வகுப்பறையில் நிகழும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது அளவு ரீதியானதும் பண்பு ரீதியானர்துமான வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற ஒன்றே பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமாகும். எமது பாடசாலைகளில் நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு மதிப்பீட்டு முறையிலிருந்து விலகி வகுப்பறையில் மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் அவர்களிடையே தொடர்பாடி அவர்களின் கற்க முடியுமாலன தன்மைகளையும், முடியாத தன்மைகளையும் பற்றி ஆசிரியர் அடிக்கடி இனங்கண்டு மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்குக் கைகொடுத்து எதிர்பார்க்கும் தேர்ச்சி மட்டத்துக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதே நோக்கமாகக் கொண்டு பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் பாடசாலைகளில் அறிமுகப் படுத்தப்பட்டு வருகின்றது.

இப்பாடசாலை மட்டக் கணிப்பீடு நிகழ்ச்சித் திட்டமானது. மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஒரு புத்தூக்க உணர்ச்சியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்துகின்றது. அத்தோடு மாணவர்கள் ஒவ்வொரு பாட அலகிலும் கணிப்பிடப்படுவதனால் மாணவர் கற்பித்தல் செய்றபாடுகளையும் வினைத்திறன் உள்ளதாகவும் மேம்படுத்துகின்றது என்பதில் சந்தேகமில்லை.

மேலும் இப்பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமானது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிகழ்ச்சித் திட்டமானது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு பாரிய சுமையாகவும் உள்ளது. இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் ஒரு சில நேரங்களில் கற்றல் - கற்பித்தலில் சலிப்படையவும் நேரிடுகின்றது.

எனவே, பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமானது புதிய கல்விச் சீர்திருத்தத்தில் வரவேற்கப்பட வேண்டிய ஓர் அம்சமாகவே உள்ளது. அதேவேளை அவற்றின் மூலம் ஏற்படுகின்ற வேலைப் பழுவை ஓரளவு குறைத்து பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தினால் முற்று முழுதாலக அதனை ஆசிரியர்களும், மாணவர்களும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

**திரு.அ.அரியதுரை,**
**மட்/களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலயம்**
**களுவாஞ்சிகுடி**

## விபுலானந்தர்

1. சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்பு நகருக்குத் தெற்கே கல்முனைப் பட்டினத்திற்கு அணித்தேயுள்ள காரைதீவு என்னும் ஊரில் பிறந்தார்.
2. வைசமும் தமிழும் தழைத்தோங்கும் அப்பழம்பெரும்பதி காரேறு மூதூர் என வர்ணிக்கப்படுகிறது.
3. சுவாமி விபுலானந்தரின் தந்தை பெயர் சாமித்தம்பி. தாயார் பெயர் கண்ணம்மையார்.
4. சுவாமி விபுலானந்தரின் இளமைப் பெயர் மயில்வானம் என்பதாகும்.
5. சுவாமி விபுலானந்தர் ஆசிரியர் பயிற்சி பெற்றவர். தமிழிலும் சமஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை ஈட்டியவர்.
6. மட்டக்களப்பில் சிவானந்தா வித்தியாலயம் எனும் கல்லூரியை நிறுவியவர் சுவாமி விபுலானந்தர் அவர்களே.
7. சுவாமி விபுலானந்தர் தமிழ் மொழி மீது அளவிடமுடியாத பற்றுக் கொண்டவராக இருந்தார்.
8. "கூழுணவுதான் கிடைத்தாலும் தமிழ்த்தாயின் அருள் எனக்கருதி அதனை ஏற்றுக்கொண்டு விரிந்த முறையில் தமிழ்த் தொண்டாற்றவேண்டும்" என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார்.
9. தமிழில்லாத கலைகளைத் தமிழ் படுத்தவேண்டும் என வற்புறுத்தியுள்ளார்.
10- முத்தமிழ் வித்தகரா்ன விபுலானந்தர் 1947ம் ஆண்டு ஆடி மாதம் 19ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

**ஆக்கம் :வா.வித்தியா**

## கல்வி

1. செல்வத்துள் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும்.
2. இது ஏனைய செல்வங்களைப் போல் பங்காளிகளாலோ கள்வராலோ கவரப்படாத செல்வமாகும்.
3. கொடுக்கக் கொடுக்கக் குறையாது பெருகிக்கொண்டே செல்வது கல்வி ஆகும்.
4. "கற்கை நன்றே கற்கை நன்றே.பிச்சை புகினும் கற்கை நன்றே" என ஒளவையார் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றார்.
5. கல்விச் செல்வம் கரை இல்லாதது. வயது பேதம் அற்றது.
6. எந்த வயதினருக்கும் கற்று சென்ற இடமெல்லாம் சிறப்படைந்து பெரும் பயன் அடையலாம்.
7. காலத்தால் அழியாத செல்வம் கல்விச் செல்வமாகும்.
8. கல்வியைக் கற்று வாழ் வாங்கு வாழ முயற்சிப்போமாக!
9. கண்ணுடையார் என்போர் கற்றோர். முகத்திரண்டும் புண்ணுடையார் கல்லாதவர்.

**ஆக்கம்**
**லி.நித்தியா**
**தரம் - 07.**




## சச்சின் டெண்டுல்கார் ஒருநாள் போட்டிகளில் அரைச் சதத்தில் அரைச்சதம்

(மருதமுனை நழீம்.எம்.பதுர்தீன்)

இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரரும் சாதனை மன்னனுமான சச்சின் டெண்டுல்கார் ஒரு அரைச் சதத்தினை 50 தடவைகள் பெற்று அரைச்சதத்தில் அரைச்சதம் பெற்றுள்ளார். இவர் தனது 50வது அரைச் சதத்தினை இந்திய மண்ணில் வைத்து ஷிம்பாவேக்கு எதிராக 62 ஓட்டங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்தார்.

இவர் தனது அரைச்சதங்களில் பாகிஸ்தான், இலங்கை ஆகியவற்றுக்கு எதிராக தலா ஒன்பதும், நியூசிலாந்து, மே.இ.தீவுகள் ஆகியவற்றுக்கு எதிராக தலா ஏழும், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஆறும், தென் ஆபிரிக்காவுக்கு எதிராக ஐந்தும், சிம்பாவேக்கு எதிராக மூன்றும், இங்கிலாந்துக்கெதிராக இரண்டும், பங்களாதேஷ், ஐ.அ.எமிரேட்ஸ் ஆகியவற்றுக்கு எதிராக தலா ஒவ்வொன்றும் பெற்று மொத்தமாக 50 அரைச் சதங்களை அடைந்துள்ளார்.

## மெய்வல்லுனர் பயிற்சியாளர்கள் நியமனம்

இலங்கை அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கத்தினால் அம்பாறை மாவட்டத்துக்குரிய மெய்வல்லுனர் பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எம்.வை.சம்சுல் ஆரீபீன் (உடற்கல்வி போதனாசிரியர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்) எம்.ஏ.நபார் (மாவட்ட விளையாட்டு அதிகாரி) உபுல் கீர்த்தி (உடற்கல்வி, க.பணிப்பாளர், தெகியத்தகண்டிய) ஏ.வி.எம்.ம.தூம் (விளையாட்டு உத்தியோகத்தர், கல்முனை தமிழ்ப் பிரிவு) ஏ.சப்றி நிசார் (விளையாட்டு உத்தியோகத்தர், கல்முனை முஸ்லிம் பிரிவு) ஏ.கே. பத்மபெரும (விளையாட்டு உத்தியோகத்தர், அம்பாறை) எஸ்.என். ஏ.எஸ்.லியனாராய்ச்சி (அம்பாறை பயிற்சி முகாம் விளையாட்டு அதிகாரி), எஸ்.ஜி.வி.யூ.நாராயண (விளையாட்டு உத்தியோகத்தர், உசன்), ஜே.எம்.உபசேன (விளையாட்டு உத்தியோகத்தர் பதியத்தலாவ) ஆகிய 09 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பாகிஸ்தான் புதிய பந்துவீச்சாளர் சாதனை

(முபா)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய வேகப்பந்து வீச்சாளர் முகம்மட் சமி தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் எட்டு விக்கட்டுக்களை வீழ்த்தி சிறந்த ஆட்டக்காரருக்கான விருதையும் பெற்றுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அக்ரம், அக்தர், ரசாக் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்கள் காயமடைந்த நிலையில் சமிக்கு விளையாடும் வாய்ப்புக் கிடைத்தது. சமி இரண்டு இனிங்சிலும் 8 விக்கட்டக்களைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணியில் நான்கு புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 299 ஓட்டங்களால் பாக் அணி நியூசிலாந்தைத் தோற்கடித்தது.

## அட்டாளைச்சேனை பிரதேச பாடசாலைகள் விளையாட்டுப்போட்டி

(முபா)

அட்டாளைச்சேனைப் பிரிவு பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி கடந்த 21,22ம் திகதிகளில் ஆசிரியர் கலாசாலை மைதானத்தில் அதி சிறப்பாக இடம் பெற்றது.

அட்டாளைச்சேனை கோட்டக்கல்வி அதிகாரி ஐ.எல்.மீராசாகிபு தலைமையில் இடம் பெற்ற இப் போட்டியில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற முதனமை விளையாட்டு முடிவுகள் பின்வருமாறு.

**கைப்பந்தாட்டம்**

15 வயது- அல் அர்ஹம் வித்தியாலயம்
17 வயது- மத்திய கல்லூரி
19 வயது- மத்திய கல்லூரி

**உதைபந்தாட்டம்**

15 வயது- அல் அர்ஹம் வித்தியாலயம்
17 வயது- மத்திய கல்லூரி
19 வயது- ஒலுவில் அல்ஹம்ரா

**கிரிக்கெட்**

மத்திய கல்லூரி

**எல்லே**

மத்திய கல்லூரி

## அகில இலங்கையில் முதலிடம்

(காரைதீவு நிருபர்)

இலங்கை அமெச்சூர் மெய்வல்லுனர் சம்மேளனத்தினால் அன்னமலையில் நடாத்தப்பட்ட தரம் iii க்கான மெய்வல்லுனர் தொழில்நுட்ப பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தை சாய்ந்தமருதைச்சேர்ந்த எம்.வை.சம்சுல் ஆரிபீன் பெற்றுக் கொண்டார்.

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உடற்கல்வி போதனாசிரியரான சம்சுல் ஆரிபின் மேற்படி பரீட்சையில் 92 1/2 புள்ளிகள் பெற்று சித்தியடைந்திருந்தார்.

அம்பாறை மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கச் செயலாளரான ஆரிபீன் அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவரும், இலங்கை மெய்வல்லுனர் தொழினுட்ப அலுவலர் சங்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளருமாவார்.

## நாணமடுவில் விளையாட்டு விழா!

(காரைதீவு நிருபர்)

நாணமடு இந்து மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டு விழா அதிபர் ஏ.விநாயகப்பிள்ளை தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூன்று இல்லங்கள் போட்டியில் கலந்து கொண்டன. சம்மாந்துறை வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சே.செல்லத்துரை ஒலிம்பிக் தீபமேற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

மேலதிய வலயக் கல்விப் பணிப்பாளர் சோ.பாக்கியநாதன் அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினமும் சிறப்பதிதியாகக் கலந்து கொண்டார். உதவிக்கல்விப் பணிப்பாளர்களான கே.வி.பரநிருபசிங்கம், ரி.சகாதேவராஜா, கே.பிரேமானந்தா, என்.செல்வநாதன், க.செல்லத்துரை, சமுர்த்தி முகாமையாளர் ரி.சபாரெத்தினம் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.

## அன்னமலையில் இல்ல விளையாட்டு விழா

(காரைதீவு நிருபர்)

அன்னமலை ஸ்ரீசக்தி வித்தியாலய முதலாவது இல்ல விளையாட்டு விழா புதிய அதிபர் வி.தவராஜா தலைமையில் நடைபெற்றது.

புதியகல்விச் சீர்திருத்த நோக்கத்தின் அடிப்படையில் இவ் விளையாட்டு விழா சகல மாணவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடைபெற்றது.

விஷேட அதிதியாக மேலதிக வலயக்கல்விப் பணிப்பாளர் சோ.பாக்கியநாதன் கலந்து சிறப்பித்தார்.

கலைமகள், மலைமகள், ஆகிய இரு இல்லங்கள் போட்டியில் கலந்து கொண்டன. பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கௌரவ அதிதியாக நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் கலந்து சிறப்பித்தார்.

# வாசகர் நெஞ்சம்

## நீரில் மிதக்கும் கமநல சேவை நிலையம்

பழுகாமத்தில் அமைந்துள்ள கமநல சேவை நிலையம் நீரில் மூழ்கிய நிலையில் காணப்படுகிறது. இதன் காரணமாக இவ்வலுவலகத்தில் வேலை செய் யும் ஊழிர்கள் பலத்த சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. மிக அண்மையில் கட்டி முடிக்கப்பட்ட இவ்வலுவலகம் இவ்வாறு நீரில் மூழ்சிக் கிடப்பதால் இன்னும் சில வருடங்களில் பாவனைக்குதவாமல் போய் விடலாம் எனப் பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.


பழுகாமம் கமநல சேவை நிலையம் நீரில் மூழ்கிக் கிடக்கும் காட்சியைப் படத்தில் காணலாம்.

(படமும் தகவலும்: ஆ.புட்கரன் பழுகாமம் நிருபர்)

## மகாப்பொல உதவிப் பணம் எங்களுக்கு எப்போது?

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதா மாதம் வழங்கப்படுகின்ற மகாப்பொல உயர்கல்வி புலமைப்பரிசில் பணம் தென்கிழக்குப் பல்கலைக்கழக 99/2000 கல்வி ஆண்டுக்கான மாணவர்களுக்குக் கடந்த 5 மாதங்களாக இன்னமும் கிடைக்கவில்லை.

ஏனைய பல்கலைக்கழக மாவணர்களுக்கு இப்பணம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. தூர இடங்களிலிருந்து விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களில் பலர் இதை எதிர்பார்த்தவர்களாகவே தங்களது கல்வியைத் தொடர வேண்டிய நிலையில் உள்ளது. இவ்வாறான நிலையில் இப்புலமைப் பரிசில் வருகை தாமதமாவது மாணவர்களைப் பெரும் சிரமத்துக்குள்ளாக்குகின்றது. இது பற்றி உயர் மட்டங்களுக்கு அறிவித்தும் இன்னும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இனியாவது நடவடிக்கை எடுப்பார்களா? என மாணவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

ஜெஸ்மி.எம்.மூஸா
1 ஆம் வருடம்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

## ஏன் இந்த நிலை?

காத்தான்குடி மட்/அந்நாசர் வித்தியாலயத்தில் 2000ம் ஆண்டு க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய 42 மாணவர்களில் 17 மாணவர்கள் மாத்திரமே க.பொ.த உயர்தரம் பயில்வதற்கு தகுதி பெற்றுள்ளார்கள்.

இப்பரீட்சைப் பெறுபேறுகள் இப்பாடசாலையின் கல்வியின் பின்னடைவை தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இதன் மர்மம் என்ன?

அதிபரின் அக்கறையின்மையா? ஆசிரியர்களின் அசமந்தப் போக்கா? இப்பகுதி வாழ் மாணவர்கள் வறுமைக் கோட்டில் உள்ளவர்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களே! பெற்றோர்களே! பள்ளிவாயல் தர்மகர்த்தாக்களே! பழைய மாணவர்களே!

எமது மாணவர்களின் எதிர்கால நிலையைப்பற்றிச் சிந்தித்து செயற்படுங்கள். அவர்களின் வாழ்வு வளம்பெற உதவுங்கள்.

கே. அப்துல்
காத்தான்குடி

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(கல்முனை மத்திய நிருபர்: ஜெஸ்மி)

மருதமுனை டொக்ஸா விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் முகாமையாளர் ஜெஸ்மி மூஸா தலைமையில் ஹவ்லன்ட் ரெஸ்ருறன்ஸில் நடைபெற்றது. இதில் பின்வருவோர் நடப்பாண்டின் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எம்.எச்.எம்.ரூாப்
செயலாளர்: எஸ்.எம்.எம்.முஜிபுல் ஹக்
முகாமையாளர்: ஜெஸ்மி எம்.மூஸா
பொருளாளர்: ஏ.ஆர்.எம்.நிஹாவ்
ஆலோசகர்கள்: பீ.எம்.ஆப்தீன், இஸட்.ஏ.எச்.றஹ்மான், எம்.எச். பைலுல் றஹ்மான், யூ.எல்.ஈறபீஸ், ஏ.ஆப்தீன், றைசுல் இஸ்லாம், முசத்தீக்.ஜே.முகம்மத், நஜிமுல் லஎஸ்.

# போர் நிறுத்தத்தை அரசு கடைப்பிடிக்க ஐ.நா.சபை அழுத்தம் கொடுக்க வேண்டும்.

## -மனித உரிமை மையம் மனு-

(நமது நிருபர்)

**விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் போது அரசு அதற்கு சாதகமாக போர் நிறுத்தத்தில் ஈடுபடாது யுத்தமுனைப்புக்களிலே ஆர்வம் காட்டி வருகிறது.**

இந்த நிலையில் ஐ.நாடுகள் சபை இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென மனித உரிமைகள் மையம் ஐ.நா.சபையின் 57வது மனித உரிமை கூட்டத்தொடரில் மனுவொன்றினைச் சமர்பித்துள்ளது.

அந்த மனுவில் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் பல்வேறு துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்படவர்கள் காணா மல் போனவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் போன்றவர்களின் விபரங்கள் மற்றும் கழுத்துறைச் சிறைச்சாலையில் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 498 இளைஞர்களின் பெயர் விபரங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நைஜீரியா, பர்மா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்கு நியமித்தது போன்றதொரு கண்காணிப்பு குழுவினை நியமிக்க வேண்டும். அல்லாதுவிடில் மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு சரிநிகரானவர்கள் வன்னி சென்று நிலமைகளை பார்வையிட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் வெளியான அறிக்கையொன்றில் உலகத்தில் ஆட்கள் காணாமல் போகும் புட்டியலில் இலங்கை ஐந்து வருடமாக இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

இதுவரை பன்னிராயிரத்து 272பேர் காணாமல் போயுள்ளனர். இதனை ஐ.நா. சபை இலங்கை அரசுக்கு சுட்டிக்காட்டிய போது 595 பேர் மட்டுமே காணாமல் போயுள்ளதாக தெரிவித்துள்ளது.

எனவே, பதினோராயிரத்துக்கு மேற்பட்டவர்கள் நிலைமை தொடர்பாக ஐ.நாடுகள் சபையின் இந்தக் கூட்டத்தில் ஒரு தீர்வு காணப்பட வேண்டும் எனஅந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### ஓட்டமாவடியில் .........

தைத் தொடர்ந்து அதனைக் கண்டிக்கும் வகையிலேயேஇந்தக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்று பாடசாலைகள் அரச அலுவலுகங்கள் இயங்கவில்லை. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு காணப்பட்டன.

இதேவேளை கண்டனப் பேரணி ஒன்றும் இன்று நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்ன வலியுறுத்தும் சுவரொட்டிகள் பதாதைகள் என்பன ஓட்ட மாவடிப் பிரதேசத்தில் கட்டப்பட்டு காணப்படுகின்றன.

# தொன்மை மிகுந்த தமிழர்களாகிய நாம் மோசமாக பின்தள்ளப்பட்டுள்ளோம்

(வுவனியா நிருபர்)

எமது வரலாறுகளை பெருமைகளைபேணி வளர்க்கின்ற பேணிபதிந்து வைக்கின்ற வழக்கத்தைக் கொண்டிராதவர்கள் இருந்த காரணத்தினாலேயே தொன்மை மிகுந்த தமிழர்களாகிய நாம் இன்றைய மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என, விடுதலைப் புலிகளின் மூர்த்த உறுப்பினரும் தமிழீழக் கல்விக் கழக பொறுப்பாளருமான வே.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

பண்டிதர் வே.பரந்தாமனின் 'பண்டைக்குமரியும் பழங்குடித் தமிழும் எனும் நூல் வெளியிட்டு விழாவின் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

*வே.இளங்குமரன்*

சிந்து வெளியில் திராவிட பெருமைகள் வெளி நாட்டவர்களே வெளியில் கொண்டு வந்தனர். அதனைப் போன்று தமிழ் மொழியின் சிறப்பையும் வெளிநாட்டவரே வெளியில் கொண்டு வந்தனர்.

இதன் பின்னரே நாம் எமது சிறப்பை அறிந்து கொண்டாம் எமது மக்களிடையே உலகமே வியக்கும் வண்ணம் போராட்டம் இனத்தின் விடுதலைக்கான போராட்டம் நடைபெறுகிறது எனத் தெரிவித்தார்.

### உயர்தரப் பரீட்சைக்கு.........................................

நாணயக்கார ஆகியோரைச் சந்தித்து இவ் விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

வட கிழக்கு மாகாண யுத்த சூழ்நிலை,அம் மாகாணங்களில் நடைபெற்று வரும் வெகுஜனப் போராட்டங்கள் காரணமாக சகல பாடசாலை மாணவர்களின் வரவு 80 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

பரீட்சைத் திணைக்களத்தின் இந்த நிபந்தனை காரணமாக க.பொ.த உயர் தரவகுப்பு மாணவர்களில் ஒரு சாரார் பரீட்சைக்கு தோற்ற முடி யாது இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் இந்த சந்திப்பின் போது அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனையடுத்து இந் நிபந்தனையில் வடக்கு கிழக்குமாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களை பாடசாலை அதிபரும் வலயக் கல்விப் பணிப்பாளரும் தீர்மானிக்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் தெரிவித்ததுடன் இது தொடர்பான சுற்றறிக்கை உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

### மாந்தீவு வைத்தியசாலை.........................

வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

மாந்தீவு தொழு நோயாளர் வைத்தியசாலை யில் தற்போது உள்ள 15 சிங்கள நோயாளர்களை ஹெந்தல தொழு நோயாளர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்வது என்றும் 13 தமிழ்,முஸ்லிம் நோயாளர்களுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தனியான பிரிவொன்று அமைக்கப்படும் வரை மாந்தீவு தொழு நோயாளர் வைத்தியசாலை தொடர்ந்து இயங்குவது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலை மூடப்பட்ட பின்பு அப்பிரதேசக் காணி உரிமையாளர் அர்சாங்க அதிபர் ஊடாக அடையாளம் காணப்பட்டு உரியவரிடம் வைத்தியசாலைப் பிரதேசம் கையளிப்பதென்ற மற்றுமோர் தீர்மானமும் நேற்றைய உயர்மட்ட மகாநாட்டில் எடுக்கப்பட்டது.

## மிதிவெடியில் சிக்கி இருவர் காயம்

(வவுனியா நிருபர்)

ஆனையிறவு கட்டுவன் கொட்டியில் மிதிவெடியில் சிக்கி ஒருவர் காலையிழந்துள்ளார். மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி பல்மடு இராமநாதன்புரத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கா.தவராசா (35) தருமபுரத்தைச் சேர்ந்த சண்முகம் முத்துச்சாமி(44) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

### அமெரிக்காவில்.......................

இத்தகைய தடைகள் மிகக் குறைந்தளவிலேயே விதிக்கப்பட வேண்டும்.இத்தகைய தடைகளினால் அமெரிக்கா அன்னியப்படுத்தக் கூடாது என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜெனரல் ஹாலிம் பவல் அண்மையில் வெளியிட்டுள்ள கருத்து மேற்கோள் காட்டப்பட்டு அந்த செய்தி தெரிவிக்கப்படுகிறது.

### சந்திவெளியில்.......................

வாவியில் கண்டெடுத்ததாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவரது கொலை தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் கிடைக்க வில்லை.

இதேவேளை மேற்படி நபர் முன்னாள் தமிழ் இயக்கமொன்றின் உறுப்பினர் எனவும் கூறப்படுகின்றது.

### கஸ்ரப் பிரதேச .......................

வேண்டும் என் அறிவிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா கல்விச் சேவை ஆணைக்குழு செயலாளரை சந் தித்து விடுவிக்கப்படாத கஸ்ரப் பிரதேசங்களுக்கு போக்குவரத்து மற்றும் போர்ச் சூழல் காரணமாக நிறைவேற்று அதிபர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடமை புரிகின்றார்கள் அங்கு செல்வதற்கு பலரும் முன்வராத நிலையில் சேவை மனப்பான்மையுடன் செல்பவர்களுக்கு சலுகை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து கஸ்ரப் பிரதேசங்களில் கடமை புரியும் அதிபர்களுக்கு சலுகை வழங்குவதாக கல்விச் சேவை ஆணைக் குழுச் செயல்ாளர் தெரிவித்தார்.

## தினக்கதிர் வெற்றிக் கிண்ண கால் பந்தாட்டப் போட்டி

தினக்கதிர் ஓராண்டு நிறைவை சிறப்பிக்கும் பொருட்டு சுதந்திரன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரனையுடன் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட சங்கம் Aபிரிவு கழகங்களுக்கிடையே நடாத்தும் 'நொக் அவுட்'முறையிலான கால் பந்தாட்டப் போட்டி 2001.4.01ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் ஆரம்பமாகவிருகின்றது.

ஆரம்ப தின நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்ட கால் பந்தாட்ட சங்க கௌரவ தலைவர் பி.ராஜன் சத்தியமூர்த்தி அவர்கள் தலைமையில் சுற்றுப் போட்டிக் குழு தலைவர் திரு.வேதநாயகம், சுற்றுப் போட்டிக் குழு செயலாளர் எஸ்.தேவராஜன் உட்பட்ட சுற்றுப் போட்டிக் குழுவின் நெறிப்படுத்தலில் இடம் பெறவுள்ளதுடன் சிறப்பு அதிதியாக தினக்கதிர் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் மனோ இராஜசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

முன்னணிக் கழகங்கள் ஒன்பது கலந்து கொள்ளும் சுற்றுப் போட்டியின் ஆரம்ப தினத்தன்று பிரபல கழகங்கள்ான பாடுமீன் கழகமும் மைக்கல்மென் கழகமும் போட்டியிட உள்ளன என்பதை மகிழ்வுடன் அறியத் தருவதுடன் கால் பந்தாட்ட இரசிகர்களை வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்

'தினக்கதிர்'
சுதந்திரன் விளையாட்டுக் கழகம

*நாளைய தினக்கதிரில்.........................*

**வணிகக் கல்வி முன்னணி ஆசிரியர்**
**கே.கே.அரஸ் எழுதும்**
**வணிகமும் இன்றைய போக்கும்**

*BRILLIANT* மட்டக்களப்பு, கல்முனை
*IDEAL* அக்கரைப்பற்று

உங்கள் பிரதிகளுக்கு முற்கூட்டிய சொல்லி வையுங்கள்

# விடுவிக்கப்பட்ட விவசாயி மரத்தால் விழுந்து மரணம்

(வவுனியா நிருபர்)

விடுதலைப் புலிகளின் தடுப்பு காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்ட சிங்கள விவசாயிகளில் ஒருவா் புதன்கிழமை தென்னை மரத்தில் ஏறி விழுந்து இறந்துள்ளார்.

என்.பி.மாறசிங்க என்னும் மேற்படி நபர் உட்பட நான்கு விவசாயிகள் கடந்த 17ம்திகதி விடுதலைப் புலிகளின் தடுப்பு காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

தாம் விடுதலை செய்யப்பட்டதற்கு ஆலயத்தில் நேற்றிக் கடன் தீர்ப்பதற்காக தேங்காய் பிடுங்க தென் னை மரத்தில் ஏறிய போதே கால் சறுக்கி விழுந்ததாகவும் பின்னர் ஹெப்பிற்றிகொலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது மரணமாகியுள்ளார்.

## வேலை வாய்ப்பு

தினக்கதிர் பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உண்டு.

1. விநியோக முகாமையாளர்
2. விளம்பர உதவியாளர்
3. விளம்பர சேகரிப்பாளர்

விண்ணப்பிக்க விரும்புவோர் சுயவிபரக் கோர்வையுடன் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.முன்னனுபவம் உள்ளவர்கள்,விற்பனை முகவர்களாக கடமையாற்றிய அனுபவமுள்ளவர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் வைத்திருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

*பொது முகாமையாளர்*
*'தினக்கதிர்'*

இப்பொழுது
**சாந்தி**
மட்டக்களப்பு
காலை 10, 2மணி மற்றும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 5.00மணி
மாதவன், ரீமா மற்றும் பலர் நடிப்பில்
**மின்னலே.....**

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.